
# வானவில்

VAANAVIL

இதழ் - 93 | ISSUE – 93

புரட்டாதி 2018 | SEPTEMBER 2018


# செய்ய வேண்டியது என்ன?




இலங்கை பிரித்தானியரிடமிருந்து 1948 பெப்ருவரி 4ஆம் திகதி சுதந்திரமடைந்து 60 வருடங்கள் நிறைவடைந்துவிட்டன. இந்தக் காலகட்டத்தில் இந்தச் சின்னஞ்சிறிய நாட்டில் எத்தனையோ போராட்டங்கள் நடந்து பல்லாயிரம் மனித உயிர்கள் செத்து மடிந்ததுடன், மனிதக் குருதி வெள்ளமெனப் பாய்ந்தோடியுள்ளது. இவற்றுக்கெல்லாம் காரணம் ஆட்சிபீடத்தில் அமர்ந்த மக்கள் விரோத அரசுகளும், அவற்றுக்கு ஆதரவளித்த அந்நிய வல்லாதிக்க சக்திகளும்தான்.

முதன்முதலாக 1953 ஓகஸ்ட் 12ஆம் திகதி அன்றைய ஐ.தே.க. அரசு மக்கள் மீது ஏராளமான பொருளாதாரச் சுமைகளைச் சுமத்தியதால், மக்கள் ஹர்த்தால் போராட்டம் ஒன்றில் குதித்து அன்றைய அரசையே பதவியில் இருந்து தூக்கி வீசினர். இந்தப் போராட்டம்தான் சுதந்திர இலங்கையின் பிற்போக்கிற்கு எதிரான முதலாவது மக்கள் போராட்டமாகும்.

அந்தப் போராட்டத்தின் விளைவாக 1956இல் நாட்டில் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க தலைமையில் ஏகாதிபத்திய – எதிர்ப்பு, மக்கள் நலன்பேண் அரசு ஒன்று உருவானது. அவர் இலங்கையின் தேசிய சுதந்திரம், சுயாதிபத்தியம், பிரதேச ஒருமைப்பாடு என்பனவற்றைப் பாதுகாப்பதற்காகவும், தேசிய பொருளாதாரம், கலாச்சாரம், கல்வி என்பனவற்றைக் கட்டி எழுப்புவதற்காகவும், தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவும் பல்வேறு பாரிய முயற்சிகளை எடுத்தார். அதைப் பொறுத்துக்கொள்ள முடியாத உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சக்திகள் 1959இல் அவரைப் படுகொலை செய்தன.

அதற்கு முன்னதாக, இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கவும், இனங்களுக்கிடையில் மோதலை உருவாக்கவும் சிங்கள – தமிழ் பிற்போக்கு இனவாத சக்திகள் 1958இல் இனவன்செயலை உருவாக்கின.

அதன் பின்னர் பண்டாரநாயக்கவின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் அவரது மனைவி சிறீமாவோ 1960இல் தேர்தலில் வெற்றிபெற்று பதவிக்கு வந்தார். அவரது அரசை 1962இல் இராணுவச் சதி மூலம் தூக்கி எறிவதற்கு இதே உள்நாட்டு – வெளிநாட்டு சக்திகளால் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அது முறியடிக்கப்பட்டது.

1970இல் மீண்டும் சிறீமாவோ தலைமையில் முற்போக்கு சக்திகளும் இணைந்த அரசு உருவாக்கப்பட்டது. ஆனால், 1971 ஏப்ரலில் ஆயுதக் கிளர்ச்சியின் மூலம் அந்த அரசைத் தூக்கி எறிவதற்காக ஜே.வி.பி. என்ற இயக்கத்தின் மூலம் உள்நாட்டு – வெளிநாட்டு பிற்போக்கு சக்திகள் மீண்டும் ஒரு முயற்சியில் இறங்கின. அந்த முயற்சியும் முறியடிக்கப்பட்டது.

1977இல் ஐ.தே.க. தலைமையில் வரலாற்றிலேயே முதல் தடவையாக மிகவும் மோசமான வலதுசாரி அடக்குமுறை அரசு ஒன்று உருவானது. அந்த அரசின் தலைவரான படுபிற்போக்குவாதியும், அமெரிக்க அடிவருடியுமான ஜே.ஆர்ஜெயவர்த்தன,

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# உலகிற்கு மீண்டும் ஓர் எச்சரிக்கை: கேரளா வெள்ளம்

கடந்த 96 வருடகால வரலாற்றில் இல்லாதளவு பொழிந்த மழையினால், பலத்த பாதிப்பினையும் ஏராளமான பொருள் சேதாரத்தினையும் சந்தித்துள்ளது, கேரள மாநிலம். இந்த வருடம் கேரளாவில் பெய்த தென்மேற்கு பருவ மழையினை யாரும் எதிர்பார்க்கவில்லை. 78 நாட்கள் நீடித்த இந்த மழைக்காலத்தில், 65 நாட்கள் கேரளாவில் மழை கொட்டித் தீர்த்துள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதம் 8ந் திகதியிலிருந்து 2 வாரகாலத்தில் கேரளாவில் பெய்த மழையானது, சராசரி மழை வீழ்ச்சியினை விட 9 மடங்கு அதிகமானது.

கேரளாவின் மொத்த மக்கள் தொகையான 3.48 கோடியில், 40 சதவீதமானோர் வெள்ளத்தால் ஏதோவொரு வகையில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏறத்தாள 600 பேர் வரையில் இறந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. 6000 இற்கும் மேற்பட்ட முகாம்களில் வெள்ளப்பாதிப்பினால் இடம்பெயர்ந்த 1 மில்லியன் மக்கள் தங்க வைக்கப்பட்டு இருந்தனர். கேரள மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயமும் சுற்றுலாவும் 20 சதவீதத்திற்கும் அதிகமான பங்கினை வகிக்கின்றன. இந்தியப் பணத்தில் சுமார் இருபதினாயிரம் கோடி ரூபா பெறுமதியான உடைமை இழப்பு, விவசாய நிலங்கள் மற்றும் உற்பத்தி இழப்பு என்பன கேரள மக்களின் எதிர்கால வாழ்க்கையை இன்னும் பல ஆண்டுகளுக்குப் பாதிக்கப் போகின்றது.

590 கிலோ மீட்டர் நீள கடற்கரையைக் கொண்டுள்ள அழகிய அரபிக் கடல், அடர்ந்த காடுகளைக் கொண்ட மேற்குத் தொடர்ச்சி மலை, ஆறுகள், உவர் நீர்த் தேக்கங்கள், இரப்பர் தோட்டங்கள், அரிதான மூலிகைகள், வன விலங்குகள் போன்றனவற்றைக் கொண்ட இயற்கையின் ஏறத்தாழ அனைத்து வளங்களையும் கொண்ட ஒரு பூமி, கேரளா. இதனால்தான் இது கடவுளின் தேசம் என்று கூறப்படுகின்றது. கேரளாவின் 44 நதிகளில், 41 நதிகள் இந்த மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன. இந்த மேற்குத் தொடர்ச்சி மலையே அரபிக்கடலில் இருந்து வரும் குளிர் காற்றினைத் தடுத்து கேரளாவில் அதிகளவிலான மழையைப் பொழியச் செய்கின்றது.

'பொதுவாகப் புவிவெப்பமடைதலால் கடல் வெப்பமும் அதிகரிக்கின்றது. இதனால் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலைகள் உருவாகுகின்றது. உஷ்ணத்தை ஒழுங்குபடுத்த இயற்கையின் வழிதான் காற்றழுத்தத் தாழ்வுநிலை. ஏனெனில் காற்றழுத்த தாழ்வு நிலை காற்றைக் குளிராக்கி மழை பெய்ய வைக்கிறது. ஓகஸ்ட் மாதம் இரண்டாம் வாரத் தொடக்கத்தில் ஒரிசாவில் வங்கக்கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது இதனால் நிலப்பகுதிக்கு மேல் உள்ள காற்று ஈரப்பதம் முழுதையும் உறிஞ்சி தன்னகப்படுத்தியது. இதனையடுத்து பருவக்காற்று கடுமையாக கிழக்கு நோக்கி நகர்ந்து கேரளாவுக்குள் நகர இதனை மேற்குமலைத் தொடர்ச்சி தடுத்தது. இதனை அடுத்தே மலைத் தொடர்ச்சியின் கேரளப் பகுதியில் மிகப்பெரிய அளவில் மழை மேகங்கள் உருவானது. இதுதான் கேரளாவில் வரலாறு காணாத மழைக்குக் காரணம்' என எம்.ஜி.மனோஜ் என்ற புவியியல் நிபுணர் கூறியுள்ளார்.

மேற்கு தொடர்ச்சி மலை என்பது தமிழகம், கேரளா, கர்நாடகா, கோவா, மகாராஷ்டிரா, குஜராத், ஆகிய மாநிலங்களை உள்ளடக்கியது. மிகவும் பாதுகாக்கப்பட வேண்டிய இந்த மலைப்பகுதியில் சுரங்கம் தோண்டுவது, கற்களை அகழ்வது, நகரமயமாக்கலுக்காக காடுகளை அழித்து கட்டிடங்களைக் கட்டி, வீதிகளை அமைப்பது போன்ற மனிதர்களின் அத்துமீறிய செயற்பாடுகளினால்தான் கேரளாவில் நிலச்சரிவு, பெருவெள்ளம் போன்ற மிகப்பெரிய இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன.

கேரளாவிற்கோ ஏனைய இந்திய மாநிலங்களுக்கோ அல்லது இலங்கைக்கோ மழை வெள்ளம் ஒன்றும் புதியதொரு நிகழ்வல்ல. பங்களாதேஸ், இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் உலக நாடுகளில் அதிக வெள்ள அபாயம் கொண்ட நாடுகளின் வரிசைகளில் உள்ளன. 2015 ஆம் ஆண்டில் பெருமழை சென்னை மற்றும் கடலூரையும் துன்பத்தில் ஆழ்த்தியது போலவே, இம்முறை கேரளாவையும் கதிகலங்க வைத்துள்ளது. அத்தோடு இது பலரையும் விழிப்படையவும் வைத்துள்ளது. மழை வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் வரும் முன்னர் தடுப்பது பற்றியும் வந்த பின்னர் மேற்கொள்ள வேண்டிய மீட்புப்பணிகள், சுகாதார நடவடிக்கைகள் பற்றியும் பலரும் கொஞ்சம் கொஞ்சமாக உணரவும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

இயற்கை அனர்த்தங்கள் வருவதைத் தடுக்க முடியாது என்றாலும், அவைபற்றி முன்கூட்டியே கண்டறிந்து மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கக் கூடியளவிற்கு இன்றைய விஞ்ஞானம் வளர்ந்துள்ளது. இயற்கை அனர்த்தம் ஏற்படப் போகின்றது என்பதை அறிந்ததும், அதனால் பாதிக்கப்படப் போகின்ற பிரதேசங்களில் வாழ்கிற மக்கள் எல்லோரும் வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்படுவதற்கான உடனடி ஒழுங்குகளை செய்வது என்பது, ஒரு பொறுப்பான அரசினது கடமையாகும். கடும் மழையால் பெருவெள்ளம் ஏற்படும்போது, வீட்டில் இருக்கும் பொருட்களை விட்டு வெளியேற மனமில்லாமல் பலரும் வீட்டுக்கு உள்ளேயே இருக்கிறார்கள். கேரளாவில் மற்றும் பிற இடங்களிலும் வெள்ளத்தாலேற்பட்ட உயிரிழப்புகளுக்குப் பின்னால் இந்த மனநிலையும் காரணமாக இருந்துள்ளது. இக்கட்டான நேரத்தில் உயிர்தான் முக்கியம் என்பதை உணர்ந்து வீட்டிற்குள் வெள்ளம் புகுந்தவுடன் உடனடியாக அனைவரும் வெளியேற வேண்டும்.

மனிதர்களின் உறைவிடமான பூமி, மனிதர்களுக்கு ஏராளமான நன்மைகளை அள்ளித் தருகின்றது. ஆனால் மனிதர்களாகிய நாங்களோ, பூமியாகிய எங்களது வசிப்பிடத்தை பாதுகாக்க மறந்து செயற்பட்டு வருவது மிகவும் வேதனையளிக்கும் விடயமாகும். மனிதர்களுக்கு வளங்களை அள்ளித்தரும் பூமியின் முதல் எதிரியாக மனிதர்களே உள்ளார்கள் என்பதை அனைவரும் உணர வேண்டும். பருவநிலை மாற்றத்தால் இனிவரும் காலங்களில் உலகெங்கிலும் இயற்கை அனர்த்தங்கள் மென்மேலும் அதிகரிக்கும். இது தொடர்பாகத் தொலைநோக்குப் பார்வை கொண்டிருக்காத மனிதர்களாலும் அரசாங்கங்களாலும் அவற்றினை எதிர்கொள்ள முடியாது.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

**'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:**

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

**இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும், சிறந்த கல்விச் சிந்தனையாளர்களில் ஒருவருமான தோழர் மு.கார்த்திகேசன் அவர்கள் மரணித்த (1977) 41ஆவது ஆண்டு நினைவாக, அண்மையில் காலமான தோழர் என்.கே.ரகுநாதன் அவர்கள் எழுதிய இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

# அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த மார்க்சியவாதி

**யாழ்ப்பாண** மண்ணில் மார்க்சியக் கருத்துக்கள் வேரூன்றாத காலம். ஈ.வே.ரா. பெரியார், அண்ணாத்துரை ஆகியோரின் பகுத்தறிவு – நாஸ்திகக் கொள்கைகள் பெருமளவு பரவியிருந்தன. தமிழகத்திலிருந்து வெளிவந்த குடியரசு, திராவிட நாடு போன்ற பத்திரிகைகளும் அவ்வியக்கத்தின் இலக்கிய வெளியீடுகளும் இவற்றுக்கு அடிகோலின. தமிழகத்திலிருந்து இலங்கை வந்த சோ.இராமசாமி என்ற ஓர் இளைஞர், யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் தமிழ் பண்ணை என்ற பெயரில் ஒரு புத்தக நிலையத்தை ஆரம்பித்து மேற்குறிப்பிட்ட இயக்கப் பத்திரிகைகள் புத்தகங்களை விற்பனை செய்து கொண்டிருந்தார். சமூக மாற்றத்தில் ஆர்வம் கொண்ட யாழ். இளைஞர்கள் சிலர் தமது வாசிப்பு வேட்கையினால் இக்கொள்கையில் மூழ்கித் திளைத்தனர்.

அந்நாட்களில், வீரகேசரிப் பத்திரிகையின் யாழ் நிருபராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அச்சுவேலியைச் சேர்ந்த நா.செல்லத்துரை என்பவர், இக்கொள்கையை முன்னெடுத்துச் செல்வதில் மிகுந்த அக்கறை செலுத்தினார். அதன் காரணமாக இந்த இளைஞர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி, இலங்கையில் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்க முற்பட்டார். அந்த ஆரம்பக் கூட்டத்தை தொடங்குவதற்கு பட்டினத்தில் வசதியான ஒரு இடம் தேவைப்பட்டது.

அப்போது, மிகவும் கஸ்டமான பின்னணியில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டதாரியான ஒரு இளம் ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். திருமணமாகிவிட்டது. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குப் பின்பக்கமுள்ள விக்டோரியா வீதியில் வசதியாக அமைந்ததொரு வீட்டில் அவர் குடியிருந்தார். பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது கம்யூனிசக் கொள்கையிலும் இறுக்கமான பற்றுக்கொண்டு, சமூக முன்னேற்ற நடவடிக்கைகளிலும் பங்குபற்றிக்



கொண்டிருந்தார். குறிப்பாக இளைஞர்களின் முன்னேற்றச் செயற்பாடுகளில் மிகுந்த ஆர்வம் கொண்டு உழைத்தார். அவர்தான் தோழர் மு.கார்த்திகேசன். செல்லத்துரை அவருடைய இல்லத்திலேயே இலங்கை தி.மு.க. அங்குரார்ப்பணக் கூட்டத்தை நடத்துவதற்கு ஒழுங்கு செய்தார். இலங்கையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. செல்லத்துரை செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். கழகத்தில் இளைஞர்களான டொமினிக் ஜீவா, டானியல், கவிஞர் பசுபதி ஆகியோரும் நானும் இணைந்து பணியாற்றினோம்.

**என்.கே.ரகுநாதன்**

இரண்டொரு வருடங்கள்தான் தி.மு.க.வின் பெயர் அடிபட்டது. வட இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சி வேரூன்றி சமூக மாற்றத்துக்கான செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியதும் தி.மு.க. இருந்த இடம் தெரியாமலே மறைந்துவிட்டது.

கம்யூனிஸ்ட் கட்சி என்றால் தொழிற்சங்கப் போராட்டம், முதலாளி வர்க்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் பயங்கரவாத நிகழ்வுகள் என்றுதான் ஆரம்ப காலத்தில் சாதாரண மக்களிடம் எண்ணங்கள் பரவியிருந்தன. இதன் காரணமாக, கம்யூனிஸ்ட் எனப்படுபவன் மிறாய்ப்பானவனாகவும், கடும் போக்குடையவனாகவும், விரோதச் செயல்களில் ஈடுபடுபவனாகவும் இருப்பான் என்பது பொதுவான கணிப்பீடு. உண்மையில் மக்களைச் சுரண்டி வாழ்பவர்களே இத்தகைய கருத்துக்களைப் பரப்பியவர்களாவர்.

இந்த அடிப்படையில் தோழர் கார்த்திகேசனை அணுகுபவர்கள் பெரும் ஆச்சரியத்துக்குள்ளாவர். காரணம், கார்த்திகேசன் மிகவும் சாதுவான போக்குடையவர். மற்றவர்களின் பிரச்சினைகளை அணுகுவதில் நிதானப் போக்குடையவர். ஏந்நேரமும் சிரித்த முகம். நண்பர்களாயிருந்தாலென்ன, உதவி கோரிவரும் புதியவர்களாயிருந்தாலென்ன அவர்களை உபசரிப்பதில் அவரும் அவருடன் இணைந்து துணைவியாரும் பெரும் கரிசனை காட்டுவார்கள். அப்படியான ஒரு குடும்பத்தை மிக அரிதாகவே காண முடியும்.

யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் தாண்டவமாடிய சாதிக்கொடுமை காரணமாக, வடபுலத்தின் பல பகுதிகளிலும் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் துளிர்த்தெழுந்த இளைஞர்கள் ஒன்றுகூடி, இதற்கு ஒரு விடிவு காண்பதற்காக ஓர் அமைப்பினை உருவாக்கினர். இந்த இளைஞர்கள் எம்.சி.சுப்பிரமணியம், எஸ்.ஆர்.ஜேக்கப் காந்தி, யோவெல் போல், ஜி.நல்லையா என்ற வரிசையில் அமைந்தனர். அமைப்பு பட்டினத்தில் அமைந்திருக்க வேண்டுமென்ற நோக்கத்தாலும், முதன்மை இளைஞர் எம்.சி.சுப்பிரமணியம் பட்டினத்தில் வாழ்ந்தமையாலும் யாழ்ப்பாணம் ஆரியகுளப் பகுதியில் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கத்தை நிறுவித் தொழிற்பட்டனர்.

மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தீண்டாமை ஒழிப்பும் முக்கிய இடம் பெற்ற ஒரு கொள்கைப் பிரகடனமாகும். இதனால் மேற்குறிப்பிட்ட இளைஞர்கள் காந்தியின் வழியில் தமது பிரச்சாரத்தை மேற்கொண்டனர். உதாரணமாக, எஸ்.ஆர்.ஜேக்கப் என்ற இளைஞர், தன் பெயருடன் காந்தியின் பெயரையும்

இணைத்து ஜேக்கப் காந்தி என்று பெயர் சூட்டிக் கொண்டார். அதேவேளை மகாத்மாவின் சத்தியாக்கிரக வழிக்கு எதிராக, சுபாஸ் சந்திரபோஸ் என்ற மாவீரர், தீவிரவாதப் போக்கில் படை நடத்தினார். சாதியடக்குமுறைக்கு எதிராக தீவிரப்போக்கு தவிர்க்க முடியாது என்பதை உணர்ந்தோ என்னவோ, சந்திரபோசுக்கு தலைவணங்கி எம்.சி.சுப்பிரமணியம் தனக்குப் பிறந்த முதல் மகனுக்கு சுபாஸ் சந்திரபோஸ் என்று பெயர் சூட்டி மனநிறைவடைந்தார். இந்நிகழ்வுகள் சாதியடக்குகுறைக்கெதிராக கிளர்ந்தெழுந்த மேற்கூறப்பட்ட இளைஞர்களின் போராட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவனவாக அமைந்தன.

சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் என்ற அமைப்பின் செயற்பாடுகளும், விரிவாக்கமும் எதிர்பார்த்த குறிக்கோளை அடைவதற்குரிய பலனைத் தரவில்லை. வதிரி, பருத்தித்துறை, மல்லாகம், சாவகச்சேரி போன்ற பல இடங்களில் மேற்படி சங்கத்தின் விளைவாக வெவ்வேறு பெயர்களில் பல சங்கங்கள் அமைக்கப்பெற்று இயங்கி வந்தாலும் அவை, ஓர் ஊர்ச்சங்கம், அல்லது வாசிகசாலை என்ற அளவிலேயே இயங்கி வந்தன. இதன் காரணமாக மிகவும் பரந்த மட்டத்திலும் ஒன்றிணைந்த செயற்பாட்டளவிலும் ஒரு இயக்கத்தை அமைக்க வேண்டிய நிலைப்பாடு ஏற்பட்டது. மேலே குறிப்பிட்ட எம்.சி.சுப்பிரமணியம், ஜேக்கப் காந்தி, யோவெல் போல், ஜி.நல்லையா போன்ற முன்னணி இளைஞர்களுடன் புதிய தலைமுறை இளைஞர்களும் சேர்ந்து ‘அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை’ என்ற விரிவான இயக்கத்தை ஆரம்பித்தனர். எம்.சி.சுப்பிரமணியம் தலைவராகப் பொறுப்பேற்றார். புத்திளைஞர்களான கே.வி.செல்வரத்தினம், கவிஞர் பசுபதி இருவரும் இணைச் செயலாளர்களாகப் பணியாற்றினர்.

எவ்வளவோ சிறப்புகளைப் பெற்றிருந்தபோதும், தமிழனிடம் நிலை கொண்டிருந்த சாதிவெறி மிகவும் இழிவானது என்பது உலகறிந்த விடயம். இந்த இழிதகமையின் விளைவாக வில்லூன்றி மயானத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட கொலைச் சம்பவமொன்று நடைபெற்றது. ஒரு பிரேதத்தைச் சுட்டெரிக்கச் சென்றவர்கள் மீது, சாதி வெறியர்கள் சுட்டதினால், முதலி சின்னத்தம்பி என்ற ஓர் இளம் குடும்பஸ்தர் பலியானார். உயிர் பிரிந்த பின் அந்த உடலைச் சுட்டெரிக்க சுடுகாட்டில் இடம் தராத மேலான நாகரிகம்தான் தமிழனின் நாகரிகம்.

சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் செயற்பட்ட காலத்தில், அதாவது 1945ம் ஆண்டில்தான் இந்தக் கொடூரச் சம்பவம் நிகழ்ந்தது. இதனால் எழுச்சியுற்ற சிறுபான்மைத் தமிழர் மகாசபையைச் சேர்ந்த தலைவர்களும், இளைஞர்களும் தமது விடுதலைப் போராட்டப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டனர்.

அந்தக் காலத்தில்தான், கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் கிளை ஆரம்பிக்கப்பட்ட வேளையில், பல்கலைக்கழகத்திலிருந்து திரும்பிய தோழர் கார்த்திகேசன் கம்யூனிஸ்ட் இயக்கப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். தி.மு.கழகம் தொடங்கப்பட்டு, அது இயங்க முடியாமல் நின்று போகவே, இளைஞர்கள் அனைவரும் காத்தியின் வழிகாட்டலில் இயங்கத் தொடங்கினர்.

வில்லூன்றிப் படுகொலையினால் பாதிக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தன் பணிகளை மேலும் விரிவுபடுத்தி செயற்படத் தொடங்கியது. முதலில் மகாத்மா காந்தியின் சாத்வீக வழிகளிலும், பின் சுபாஸ் சந்திரபோசின் தீவிரவாதப் போக்கிலும் நம்பிக்கை கொண்டு இயங்கிய எம்.சி.சுப்பிரமணியத்துக்கு அப்பாதைகள் பயன்படாத காரணத்தால் தோழர் கார்த்திகேசனின் வழிகாட்டலில் முன்னேற்றத்தைக் கண்டார். கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து, சிறுபான்மைத் தமிழர்களின் விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார். சிறுபான்மைத் தமிழர் மகாசபையே கம்யூனிஸ்ட் கட்சியின் ஓர் உப ஸ்தாபனமாக இயங்கத் தொடங்கியது. இதன் காரணமாக, புரட்சியை ஏற்றுக்கொள்ளாத மிதவாதிகளான ஜேக்கப் காந்தி, யோவெல் போல், ஜி.நல்லையா, கே.வி.செல்வரத்தினம் போன்றோர் மகாசபையிலிருந்து விலகிச் சென்றனர். எம்.சி. தலைவராகவும், பசுபதி செயலாளராகவும் மற்றும் துடிப்பான இளைஞர்கள் பங்காளிகளாகவும் இணைந்து மகாசபைப் பணிகளை முன்னெடுத்துச் சென்றனர். தோழர் கார்த்திகேசன்தான் இதற்கு மூலகாரணமாக இருந்து செயற்பட்டார்.

சுடுகாட்டுப் பிரச்சினைதான் முதலில் தோன்றியது. சாதி வெறியர்களான பிற்போக்குவாதிகள்தான் இதற்கு வழிகோலினர். அதனைத் தொடர்ந்து பல போராட்டங்கள் வெடித்தன. ஆலயப் பிரவேசம், தேனீர்க்கடைப் பிரவேசம், பாடசாலை அனுமதி, அத்துடன் சுடுகாட்டுப் பிரவேசம் என்று வடமாநிலத்தின் பல பிரதேசங்களிலும் போராட்டங்கள் நடைபெற்றன.

நல்லூர் கந்தசாமி கோயில், பன்றித்தலைச்சி அம்மன் கோயில், இறுதியாக மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் என்று மேலும் பல கோயில்களில் அகிம்சைப் போராட்டம் நடத்தி அவ்வாலயங்களை சகல மக்களும் வணங்குவதற்காக திறந்து வைத்தார்கள்.

ஒரு தாழ்த்தப்பட்டவன் தேனீர்க்கடைக்கு வெளியே நின்றுதான், அதுவும் கறள் பேணியில் தேனீர் குடிப்பது நடைமுறையாக இருந்தது. மகாசபைப் போராட்டத்தினால் சகல கடைகளிலும் உள்ளே சென்று இருக்கைகளில் அமர்ந்து உணவு உண்ணவும், தேனீர் அருந்தவும் வழி பிறந்தது.

பெரிய பாடசாலைகளில் சிறுபான்மைத் தமிழர்களின் பிள்ளைகள் படிக்க முடியாது. ஊரிலுள்ள சிறிய பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்புவரைதான் படிப்பு. மகாசபையின் செயற்பாடுகளால், தற்போது எல்லாப் பாடசலைகளிலும் எல்லாப் பிள்ளைகளும் படிக்கலாம்.

முதலி சின்னத்தம்பி சுட்டுக் கொலை செய்யப்பட்ட வில்லூன்றிச் சுடலைச் சம்பவத்தின் பின், அந்தக் கொடுமையை எதிர்த்துப் போராடி மூன்று ஆண்டுகளின் பின்பு, அச்சுடலையில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிணங்களும் எரிக்கப்படத் தொடங்கின. இப்போது, எந்தச் சுடலையிலும் யாரும் தமது பிணங்களை எரிக்கலாம், புதைக்கலாம்.

எம்.சி.சுப்பிரமணியம் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைவராக மட்டும் இருந்து பணியாற்றியிருந்தால் இத்தனை சமூக மாற்றங்களும் ஏற்பட்டிருக்குமா? என்பது கேள்விக்குரிய விடயம். அவர் ஒரு கம்யூனிஸ்ட்டாக இருந்தபடியால்தான்

கொடிய சாதிவெறி பிடித்த யாழ். மண்ணில் இத்தனை சாதனைகளையும் வெற்றிகரமாகச் செய்ய முடிந்தது.

கார்த்திகேசன் கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவுகள் தீர்மானங்களோடு மட்டும் நின்றவரல்லர். எந்தப் போராட்டங்கள் நடந்தாலும் அந்தப் போராட்டத் தோழர்களுக்கு உற்ற வழிகாட்டியாகச் செயற்பட்டு, களத்திலுமிறங்கிப் போராடியராவர்.

கம்யூனிச சித்தாந்தம் என்றால், தொழிலாளர் விவசாயிகளின் உரிமைப்போராட்டம், முதலாளி வர்க்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள் என்று பொதுவான ஒரு கண்ணோட்டம் உண்டு. மார்க்சும் வர்க்க பேதமற்ற, ஏற்றத்தாழ்வற்ற ஒரு உலகைப் படைக்கவே தனது சித்தாந்தத்தை உருவாக்கினார். அந்த வழியில் ஒரு சமத்துவ உலகுக்கு எதிரான கருத்துக்கள், கொள்கைகள், செயற்பாடுகள் இருக்கும் ஒரு தேசத்தில் அல்லது நாட்டில் நிலவும் ஏற்றத்தாழ்வுக்கெதிராகச் செயற்பட்டு சமாதான சகவாழ்வை உண்டாக்குவதே முக்கியமாகும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கம்யூனிஸ்ட் கட்சியின் முனனெடுப்பில், பஸ் தொழிலாளர் போராட்டம், சுருட்டுத் தொழிலாளர் போராட்டம், மட்பாண்டத் தொழிலாளர் போராட்டம், சீமெந்துத் தெரிலாளர் போராட்டம் எனப் பல போராட்டங்கள் வெடித்து, வெற்றிகளையும் ஈட்டித் தந்துள்ளன. அதேவேளை இந்த மண்ணில் தீண்டாமை எனும் கொடிய நோய் வேரூன்றியிருந்தமை காரணமாக, அந்தத் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களையே கம்யூனிஸ்ட் கட்சி முன்னின்று நடத்தி, பெரும் வெற்றிகளையும் சாதித்துள்ளது. இந்த வகையில், யாழ்ப்பாணக் கம்யூனிஸ்ட் கட்சியின் பங்களிப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது.

யாழ்ப்பாணத்தில் நிறுவனரீதியாக கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்படுவதற்கு முன் தோழர் காத்தி அவ்வியக்கத்தை தனியாக இருந்து வளர்த்தெடுத்தார் என்று முன்பு கூறப்பட்டுள்ளது. நிறுவனமாகக் கட்சி ஆரம்பித்தபின் புத்திஜீவிகளும் சாதாரண மக்களுமாகப் பல தலைவர்கள் இப்பணியில் ஈடுபட்டுழைத்தனர். அ.வைத்திலிங்கம், பொன்.கந்தையா, அ.ராமசாமி ஐயர், ஐ.ஆர்.அரியரத்தினம், டாக்டர் சீனிவாசகம், ஆர்.ஆர்.பூபாலசிங்கம், டொமினிக்ஜீவா, டானியல், வி.ஏ.கந்தசாமி என்று பலரைக் குறிப்பிடலாம். கட்சித் தோழர்களாக இருந்தாலென்ன சிலருக்குச் சில குடும்பச் சுமைகள், பொருளாதார நெருக்கடிகள் இருக்குமாயின் அவர்களின் செயற்பாடுகளில் சில பின்னடைவுகள் தோன்றக்கூடும். ஆனால் கார்த்திகேசன், தன் இறுதிக் காலம்வரை தூய்மையான அர்ப்பணிப்போடு தன்னைக் கட்சிப் பணிகளில் ஈடுபடுத்தி வாழ்ந்த புனிதர் ஆவர்.

அவர் நாமம், மார்க்சியவாதிகளிடையில் மட்டுமல்ல, சாதாரண மனிதரிடையிலும் என்றும் வாழும்!

### *என்.கே.ரகுநாதன்: நீண்டகால கட்சித் தோழரும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க முக்கியஸ்தருமாவர்.*

**குறளும் கறளும்**

யாழ்ப்பாணத்தில் தேநீர்க்கடைப் பிரவேசம் நடைபெற்ற நாட்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென உணவகங்களில் பழைய கறள் பேணிகளில் தேநீர் வழங்கினார்கள்.

இதை —
"குறள் படித்த தமிழனுக்கு
கறள் படிந்த பேணியா?"

என எதுகை மோனையுடன் குத்தலாகச் சொன்னார் கார்த்திகேசன்.

**(இக்கட்டுரை தோழர் மு.கார்த்திகேசன் அவர்களின் 25ஆவது ஆண்டு நினைவாக 2002இல் அவரது புதல்வியர்களில் ஒருவரான ஜானகி பாலகிருஸ்ணன் அவர்கள் தொகுத்த பலரின் கட்டுரைகள் அடங்கிய "கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்" என்ற தொகுப்பு நூலிலிருந்து நன்றியுடன் எடுத்துப் பிரசுரிக்கப்படுகின்றது)**

# இப்படித்தான் செய்திகள் திரிக்கப்படுகின்றன!

**யா**ழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், 'சப்றா நிதி நிறுவன புகழ்' பிரமுகருமான ஈ.சரவணபவனுக்குச் சொந்தமான 'உதயன்' நாளேட்டின் ஒகஸ்ட் 15ஆம் திகதிய வெளியீட்டில் பிரசுரமான ஒரு செய்தியின் தலைப்பு இப்படி இருந்தது:

"மகிந்தவின் ஊழல் மோசடி 18 வழக்குகள் தயார்"

இந்தச் செய்தியைப் படித்துவிட்டு 'இந்த மனிசன் ஒருதருக்கும் தெரியாமல் இத்தனை மோசடி செய்திருக்கிறாரா?' என யோசித்துக் கொண்டு உள்ளே செய்தியை வாசித்தால், "மகிந்த காலத்தில் செய்யப்பட்ட நிதி மோசடிகள் சம்பந்தமாக விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளன" என்ற (அடிக்கடி சீனவெடிகள் கொளுத்திப் போடுகின்ற) அமைச்சர் ராஜித சேனரத்னவின்




ஊடகங்களுக்கான பேச்சுக்கே சரவணபவனின் உதயன் 'ஜிகினா' வேலை செய்து செய்தி வெளியிட்டிருப்பது தெரிய வந்தது.

இது உதயனின் பல ஆயிரம் திரிப்புகளில் ஒன்று. உதயன் மட்டுமென்றில்லை, அநேகமான ஊடகங்கள் அப்பாவி வாசகர்களுக்கு இப்படித்தான் 'செய்தி'களை வழங்குகின்றன.

யாராவது பல்கலைக்கழக மாணவர்கள் இந்த ஊடகங்கள் செய்யும் 'தர்ம சேவை'யைத் தமது பட்டப் படிப்பு ஆய்வுக்காக எடுத்துக் கொண்டு ஆய்வு செய்தால் சமூகத்துக்குச் செய்யும் புண்ணியமாக இருக்கும்.

**–வேலவன்**

# *கொழும்பு மாநகர சபையில் ஒரு 'வீராங்கனை'!*

**கொ**ழும்பு மாநகரசபை நிர்வாகம் ஐ.தே.க. வசம் இருக்கிறது. அதன் முதல்வராக ஐ.தே.க. தலைமைக்கு மிகவும் வேண்டிய ரோசி சேனநாயக்க அம்மையார் பதவி வகிக்கிறார்.

அவர் முதல்வராகப் பதவியேற்றதும் தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் மலசல கூடங்களை நவீனப்படுத்துவதற்காக பல இலட்சம் ரூபாவை ஒதுக்கி பலரினதும் கண்டனத்துக்குள்ளானார். ஆனால் அவர் தனது தீர்மானத்திலிருந்து பின்வாங்கவில்லை.

இப்பொழுது தனது வாசஸ்தலத்தினை இரண்டு வருடங்கள் சுத்திகரிப்பதற்காக 8.5 மில்லியன் (85 இலட்சம்) ரூபாவுக்கு ஒரு தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளார். இதற்கு முன்னர் மாதாந்தம்

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...**

# ‘இந்தியாவிலிருந்து பார்க்கும் அமெரிக்கா உண்மையான அமெரிக்கா அல்ல!’ நாகேஸ்வரி அண்ணாமலை பேட்டி

தமிழ்நாட்டின் கடைக்கோடி பகுதியொன்றில் பிறந்த நாகேஸ்வரி, பெரிய மொழி ஆளுமையான அண்ணாமலையின் மனைவி. இள வயதிலேயே கணவரோடு அமெரிக்கா சென்றவர். தன் குடும்பம், பிள்ளைகளின் எதிர்காலம் என்று அவர் காலத்துப் பெண்கள் பலரையும்போல ஒரு சின்ன வட்டத்துக்குள் அடைத்துக்கொண்டிருக்க வேண்டியவர். தன்னுடைய 60-வது வயதுக்குப் பிறகு, திடீரென எழுதத் தொடங்கினார்.

‘அமெரிக்காவில் முதல் வேலை’, ‘அமெரிக்க அனுபவங்கள்’, ‘அமெரிக்காவின் மறுபக்கம்’ என்று அமெரிக்கா பற்றி அவர் எழுதிய புத்தகங்கள் (அடையாளம் பதிப்பகம்) அமெரிக்க வாழ்வு, கலாச்சாரம் சம்பந்தமான தமிழின் முக்கியமான வரவுகளாக அமைந்தன. தொடர்ந்து, ‘ஐந்து தலைமுறை நாடார் பெண்களின் கதைகள்’, ‘பாலஸ்தீன இஸ்ரேல் போர்’, ‘போப் பிரான்சிஸ்’ ஆகிய புத்தகங்களை எழுதினார். அமெரிக்கா தொடர்பாக இங்கு நிலவும் பொது பிம்பத்தை உடைப்பவை நாகேஸ்வரியின் புத்தகங்கள். 80 வயதைத் தொடவிருக்கும் நாகேஸ்வரி சமீபத்தில் இந்தியா வந்திருந்தார். அவருடைய அமெரிக்கப் புத்தகங்கள் பற்றி பேசினேன்.

**வயதாக ஆக உடலளவிலும், மனதளவிலும் சோர்வடை வதாக பொதுவான அபிப்ராயம் இருக்கிறது. ஆனால், நீங்கள் 60 வயதுக்குப் பிறகுதான் எழுதத் தொடங்குகிறீர்கள்?**

இளம் வயதிலேயே நிறைய சிந்திக்கக்கூடியவளாக இருந்தேன். அப்போதெல்லாம் எங்களூர் பெண்கள் வெளியூருக்குக் கல்லூரிப் படிப்புக்கு அனுப்பப்படவில்லை. அப்பாவிடம் போராடிதான் படிக்கச் சென்றேன். அமெரிக்க வாழ்க்கை எனக்குள் பல்வேறு சிந்தனைகளை உருவாக்கியது. இந்தியா வரும்போதெல்லாம் அமெரிக்கா குறித்து இங்கே கேட்கக்கூடிய கேள்விகளும் யதார்த்தமும் வேறாக இருந்தது. அப்போதுதான் அமெரிக்கா குறித்து எழுத வேண்டும் என்று நினைத்தேன். எழுத ஆரம்பித்த பிறகு இன்னும் நிறைய எழுத வேண்டும் என்று தோன்றுகிறது.

**எழுத வேண்டியவற்றை எதை அடிப்படையாக வைத்து தேர்ந்தெடுக்கிறீர்கள்?**

‘அமெரிக்காவின் மறுபக்கம்’ எழுதும்போது



அமெரிக்க சரித்திரங்களைப் படிக்கிறேன். அவர்கள் வாழ்வியலை நேரடியாகப் பார்க்கிறேன். நம் நாட்டில் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு இணையாகக் கறுப்பர்களுக்கு எதிரான வெறுப்பு அமெரிக்காவில் இருக்கிறது. வளமான நாடாக இருந்தாலும் நிறைய பிரச்சினைகள் அங்கேயும் இருக்கின்றன. அடுத்து, இஸ்ரேல் பிரச்சினையும் என்னைக் கடுமையாகப் பாதித்தது. வெளியிலிருந்து வந்த யூதர்கள் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக அங்கிருக்கும் அரேபியர்களைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேற்றிவிட்டார்கள். புனிதத்தின் பெயரால், கடவுளின் பெயரால் சகித்துக்கொள்ள முடியாத வன்முறையை வெளிப்படுத்துகிறார்கள். யூதர்களுக்கு முஸ்லிம்களோடுதான் என்றில்லை, யூதர்களுக்கு கிறிஸ்தவர்களோடும் பிரச்சினைதான். இயேசுவை யூதர்கள் கொன்றார்கள் என்பதற்காகக் கிறிஸ்தவர்களுக்கு யூதர்கள் மீது பகை. இயேசுவே ஒரு யூதர்தான். என்னவொரு முரண் பாருங்கள்! உலகத்தில் நியாயமில்லாமல் நடக்கும் விஷயங்களெல்லாம் என்னை ரொம்பவே பாதிக்கும். அதைப் பற்றி எனது எண்ணங்களை யாரிடமாவது சொல்லிவிட வேண்டும் என்று தோன்றும். அப்படித்தான் எனது பாதையைத் தீர்மானிக்கிறேன்.

**இந்தியர்களுக்கு அமெரிக்கா ஒரு கனவுப் பிரதேசமாக இருக்கிறது. இந்தியர்களின் மரபார்ந்த சிந்தனை வழியாக அமெரிக்காவை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

நம் சிந்தனையில் இருக்கும் அமெரிக்காவும் யதார்த்தமும் ஒன்றல்ல. இப்போதும் அமெரிக்காவில் பாலும் தேனும் ஒடுவதாக நினைக்கிறோம். அமெரிக்க ஏழைகள் அவசரத்துக்கு மருத்துவரைப் பார்ப்பது சாதாரண காரியம் அல்ல. மருத்துவத் துறையில் முன்னேறியிருப்பதற்கு நிகராக மருத்துவக் குளறுபடிக்குள்ளும் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். கறுப்பினத்தவர்கள் பற்றி இந்தியர்களுக்கு சில அடிப்படை விஷயம் தெரிந்திருக்கும் என்றாலும்கூட யதார்த்ததில் கொடூரமாக இருக்கிறது. கறுப்பர்கள் அனுபவிக்கும் கொடுமைகள், பூர்வகுடிகளை அமெரிக்க வெள்ளையர்கள் அழித்த விஷயங்களெல்லாம் நம் கற்பனைக்கு அப்பாற்பட்டது. மனதளவிலும் அவர்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள். சும்மா இருப்பவனிடம் துப்பாக்கி இருப்பதாகச் சொல்லி சுட்டுவிட்டுத் தற்காப்புக்காகச் சுட்டேன் என்பார்கள்.

**இன வெறுப்பை ஒழிப்பதற்காக அங்கே என்னென்ன முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன?**

ஒன்றுமே கிடையாது. மக்கள் மனதிலுமேகூட அப்படியான எண்ணங்கள் கிடையாது. இந்தியாவில் பிற்படுத்தப்பட்டவர்களால் ஒரு ஐடி நிறுவனத்தில் பணிபுரிந்துகொண்டு பொருளாதாரரீதியில் மேலே வர முடிகிறது. அமெரிக்காவில் அப்படியான வாய்ப்புகள் கறுப்பர்களுக்குக் கிடையாது.

**இவ்வளவு பாகுபாடு இருக்கையில் அமெரிக்காவால் எப்படி உயர்ந்து நிற்க முடிகிறது?**

சில குளறுபடிகள் இருந்தாலும்கூட நம்மோடு ஒப்பிடும்போது அவர்களின் நீதி அமைப்பு மேம்பட்டதாக இருக்கிறது. ஒருவருக்கு வேலை கொடுப்பதற்காக சலுகை எதிர்பார்த்தவரின் தொலைபேசி உரையாடலை மட்டுமே கொண்டு ஒரு வழக்கில் தண்டனை கொடுக்கிறார்கள். இங்கே இதெல்லாம் சாத்தியமா? அமெரிக்க மக்களிடையே சுத்தம் குறித்த புரிதல் அதிகம். எப்படியோ பழக்கிவிட்டார்கள். குப்பைகளைக் கையாள்வது மிகச் சிறப்பாக இருக்கிறது. ஆங்காங்கே குப்பைத் தொட்டிகளும், இரண்டு நிமிட நடைக்கு இடையே கழிப்பறையும் உண்டு. வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகளை மனதில் கொண்டே பேருந்துகள் வடிவமைக்கப்படுகின்றன. இதெல்லாம் நாம் பின்பற்ற வேண்டியவை. உணவு, பழக்கவழக்கங்கள், கலாச்சாரம் போன்றவற்றில் அவர்களைப் பின்பற்றவே கூடாது என்பேன்.

**இங்கிலாந்தில் கிரிக்கெட் என்றால் அமெரிக்காவில் பேஸ்பால். பைப்**

**திருகுவதில்கூட வலது இடது மாற்றம். ஸ்விட்ச் போடுவதில் மேல் கீழ் மாற்றம். இதெல்லாம் அமெரிக்கர்கள் பிரிட்டிஷாருக்கு எதிரான மனநிலையில் செயல்படுவதன் வெளிப்பாடுதானா?**

பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்றபோது எல்லா விதத்திலும் அவர்களிடமிருந்து மாறுபட்ட ஒரு சமூகமாக அமெரிக்காவைக் காட்ட வேண்டும் என்ற நினைப்பு அமெரிக்காவுக்கு இருந்தது. அதன் விளைவுகள்தான் இதெல்லாம். ஆனால், பிரிட்டிஷாருடன் அமெரிக்கர்களுக்குப் பகை என்றெல்லாம் சொல்ல மாட்டேன். அமெரிக்கா பின்தங்கி இருந்தபோது பிரிட்டிஷாரிடமிருந்து எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டார்கள். அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் இன்றும் நெருக்கம் உண்டு. அமெரிக்கர்கள் லண்டன் போவதெல்லாம் சுலபமானது, எளிதில் விசா கிடைக்கும். தொப்புள்கொடி உறவுபோல இருவருக்கும் ஒரு பந்தம் தொடர்கிறது.

**ரீகன், புஷ், கிளிண்டன், ஒபாமா என இவர்கள் வழியே நீங்கள் அமெரிக்காவைப் பார்க்கும் விதம் முக்கியமான ஒன்று. இப்போது ட்ரம்ப் ஆட்சியை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

ஒபாமா செய்த சீர்திருத்தங்களையும், மாற்றங்களையும் ஒபாமா செய்தார் என்ற ஒரே காரணத்துக்காகவே அதை மாற்றிக்கொண்டிருக்கிறார் ட்ரம்ப். ஒபாமா ஆட்சியின்போது வங்கிகளுக்கு சில கட்டுப்பாடுகள் விதித்தார். அதை ட்ரம்ப் மாற்றிவிட்டார். சுற்றுச்சூழல் துறையிலும் அப்படியே. பிற நாடுகளைப் பகைத்துக்கொள்வதும் அதிகமாகியிருக்கிறது. ஒழுக்கத்திலும் ரொம்ப மோசம். ஆனால், இன்னும் அவருக்கான ஆதரவு இருக்கிறது. “தெருவில் வைத்து ஒருவரை நான் சுட்டால்கூட மக்கள் என்னை ஆதரிப்பார்கள்” என்கிறார் ட்ரம்ப். இப்போது ட்ரம்பின் அடுத்த ஆட்சிக்காலம் குறித்து பேச ஆரம்பித்திருக்கிறார்கள். அதை நினைத்தால் பயமாக இருக்கிறது.

**பெண்ணியம் குறித்து நிறைய புகார்களோடு எழுதியிருக்கிறீர்களே?**

ஆமாம். பெண்ணியம் பேசப்பட்ட பிறகு அமெரிக்கா, கலாச்சாரத்தில் எண்ணற்ற பின்னடைவுகளைச் சந்தித்திருக்கிறது. ஆண்களைப் போல நாங்களும் போரின் முன்வரிசையில் நின்று சண்டையிடுவோம் என்கிறார்கள் பெண்கள். வீட்டைக் காலிசெய்யும்போது பொருட்களைத் தூக்க ஆண்களால்தான் முடியும். பெண்களால் முடியாது. முடியாத வேலையைப் பெண்கள் செய்ய வேண்டாமென்கிறேன். சமூகம் இருவரையும் ஒன்றாக மதிக்க வேண்டும், இருவருக்கும் சமமான உரிமையைக் கொடுக்க வேண்டும் என்று பேசுவதற்குப் பதிலாக இவர்கள் பேசும் பெண்ணியம் பெண்களின் மனநிலையைப் பெரிதும் பாதித்துவிட்டது. கல்யாணத்துக்கு முன்பாக சேர்ந்து வாழ்வதும், கல்யாணத்துக்குப் பிறகு பிரிந்து வாழ்வதும் சகஜமாகிவருகிறது. அதை நாமும் பின்பற்றத் தொடங்கியிருக்கிறோம். இது சமூகத்துக்கான கேடு. முக்கியமாக, இதுபோன்ற உறவுகளால் குழந்தைகள்தான் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள். கலாச்சாரரீதியாக சீர்கெடுவதால் சமூகம் எவ்வளவு மோசமான நிலைக்குச் செல்லும் என்பதற்கு முன்னுதாரணமாக அமெரிக்கா இருக்கிறது. பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். பலியாகக் கூடாது.

**-த.ராஜன்**

(நன்றி: தி இந்து)

# இ.போ.ச - இதற்குப் போனால் சங்கடம்!

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் தமிழ் அரசியல்வாதி ஒருவருக்குச் சொந்தமான பிரபல பத்திரிகை நிறுவனம் ஒன்று தனது ஊழியர்களுக்கான சேமலாப நிதியைச் செலுத்தாது பல இலட்சம் ரூபாவை மோசடி செய்துள்ள விபரத்தை ‘வானவில்’ பத்திரிகையில் அண்மையில் வெளியிட்டிருந்தோம். இப்போது வட பிராந்திய போக்குவரத்துச் சபை (இ.போ.ச.) அவ்வாறான ஒரு மோசடியில் ஈடுபட்டுள்ளதாகத் தகவல் வந்துள்ளது.

அதாவது, வட பிராந்திய போக்குவரத்துச் சபை தனது ஊழியர்களுக்கு 2011 – 2015 காலப் பகுதியில் ஊழியர் சேமலாப நிதி செலுத்தவில்லை என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. இத்தொகை 35 கோடி ரூபாவுக்கும் அதிகம் எனத் தெரிகிறது. இதன் காரணமாக வட பிராந்தியத்திலுள்ள யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய சாலைகளைச் (டிப்போ) சேர்ந்த சுமார் 2,000 ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் ஓய்வு பெற்று மரணித்துவிட்டும் கூட அவர்களது குடும்பத்தினருக்கு அந்த நிதியை வழங்காது போக்குவரத்துச் சபை நிர்வாகம் மனிதத்தன்மையற்ற ரீதியில் நடந்து கொண்டுள்ளது.

இந்த அநீதி சம்பந்தமாக வட பிராந்திய போக்குவரத்துத் துறைத் தொழிற்சங்கங்கள் நிர்வாகத்திடம் முறையிட்டும் பயனில்லாத நிலையில் தொழிற் திணைக்களத்திடமும், மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறையிட்டும் அவர்களும் இது வரை இந்தப் பிரச்சினை சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த நிலையில் வேலை நிறுத்தம் போன்ற தொழிற்சங்க நடவடிக்கை மூலம் நிர்வாகத்தை வழிக்குக் கொண்டு வருவது குறித்து தொழிற்சங்கங்கள் ஆலோசித்து வருகின்றன.

இ.போ.ச. ஊழியர்களைப் பொறுத்தவரையில் ஏனைய அரச ஊழியர்களைப் போல ஓய்வு பெற்றதும் மாதாமாதம் அரசாங்க ஓய்வூதியம் வழங்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக அவர்களின் சம்பளத்திலிருந்தும், நிர்வாகம் வழங்கும் நிதியிலிருந்தும் செலுத்தப்பட்டு வரும் ஊழியர் சேமலாப நிதியே அவர்கள் ஓய்வுபெறும் போது ஒரு தொகையாக வழங்கப்படுகிறது. அந்தத் தெகையைக் கூட ஒரு ஊழியர் 30 – 40 வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெறும்போது நிர்வாகம் வழங்காவிடின் அது எவ்வளவு பெரிய அநீதி!

இந்த நிலையை எண்ணி மனம் வருந்திய ஓய்வுபெற்ற போக்குவரத்துச் சபை ஊழியர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கத்தினால் வகுக்கப்பட்ட சட்டங்களையே மதித்து நடக்காதவர்கள் கைகளில் தனிநாட்டு நிர்வாகம் வந்தால் எப்படி இருக்கும் என்று விசனப்பட்டார்.

ஜெனிவா தீர்மானங்கள் குறித்து அடுக்கடுக்காக தீர்மானங்கள் நிறைவேற்றும் வடக்கு மாகாண சபை தனது சொந்த மக்களான இந்த ஊழியர்களின் பிரச்சினை குறித்து கிஞ்சித்தும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

# நீங்களும் தெரிந்து கொள்வதற்காக, அறிந்ததைப் பகிர்கின்றோம்!

## இது நாட்டுக்கு நல்லதா?

இலங்கையில் மீண்டும் அமெரிக்க சமாதானப்படை செயற்படுவதற்கான ஒப்பந்தம் அண்மையில் செய்யப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சுகளின் முடிவில் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 25 பேர் கொண்ட அமெரிக்க குழு 2019இல் இலங்கை வரவுள்ளது.

அமெரிக்க சமாதானப் படைக் குழுவினர் பொதுவாக இளைஞர்களுக்கு ஆங்கில மொழிக்கல்வியில் பயிற்சி போன்றவற்றை வழங்குவார்கள் என்று கூறப்படுகிறது. ஆனால் இந்த மாதிரி அமெரிக்கா வைத்திருக்கும் பல அமைப்புகள் மூன்றாம் உலக நாடுகளில் அமெரக்காவின் அரசியல் நலன்களைச் செயற்படுத்துவதற்கான மறைமுகக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாக இருந்து வருகிறது. இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக அமெரிக்க சமாதானப்படை சில நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்ட சம்பவங்களும் கடந்த காலங்களில் நிகழ்ந்துள்ளன. இலங்கையில் அமெரிக்க அமைதிப்படையைச் சேர்ந்தவர்கள் 1962 முதல் 1998 வரை செயற்பட்டு வந்த போதிலும், 1998இல் சந்திரிக குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் சில காரணங்களுக்காக இத்திட்டம் நிறுத்தப்பட்டது என்பது குறிப்பித்தக்கது.

•

## 640,000 ரூபா பெறுமதியான கதிரைகளில் இருந்து 'சேவை'யாற்றப் போகும் மாகாண சபை உறுப்பினர்கள்!

இலங்கையின் மேல் மாகாண சபைக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவென இருந்த ஆடம்பரக் கதிரைகளின் இறக்குமதியை ஒரு முறைப்பாட்டைத் தொடர்ந்து மேல் மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணக்கார தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார். இந்தக் கதிரைகள் ஒவ்வொன்றும் ஆறு இலட்சத்து, நாற்பதாயிரம் ரூபா பெறுமதியில் இறக்குமதி செய்யப்படவிருந்தன. பத்தரமுல்லையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மேல் மாகாணசபையின் கட்டிடத்தில் மாகாண சபை உறுப்பினர்கள் அமர்வதற்கெனவே இக்கதிரைகள் இறக்குமதி செய்யப்படவிருந்தன. (இலங்கையில் தரமான மரங்களும், கைதேர்ந்த மரவேலை விற்பன்னர்களும் இருப்பது இந்தக் கனவான்களுக்குத் தெரியாது போலும்)

இந்தக் கதிரைகளை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்படும் தொகை சந்தேகமின்றி பொதுமக்களின் வரிப்பணமாகும். நாட்டில் எத்தனையோ பாடசாலைகளில் பள்ளிக் குழந்தைகள் இருந்து படிக்க மேசை, வாங்கு இன்றி தரையில் இருந்து படிக்கையில், மேல் மாகாண சபை உறுப்பினர்கள் 640,000 கதிரைகளில் இருந்துதான் மக்களுக்கு 'சேவை' ஆற்றப் போகிறார்கள் என்றால், அதில் உட்காரப் போகின்ற அவர்களது பிட்டத்தின் பெறுமதி எத்தனை கோடி ரூபா பெறுமதி இருக்குமோ தெரியவில்லை!

•

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் இன்னொரு 'கிம்பளம்!'

அண்மையில் இலங்கையில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்களை 215 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு அரச தரப்பில் முயற்சி எடுக்கப்பட்டது. இந்த முயற்சிக்கு பல தரப்புகளிடமிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியதால், அத்திட்டம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மக்களின் கவனம் வேறு ஏதாவது ஒரு விடயத்தில் திரும்பும்போது சம்பள அதிகரிப்பை சத்தம் சந்தடியில்லாமல் அரசாங்கம் நிறைவேற்றிவிடும் என நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

இது ஒருபுறமிருக்க, அபிவிருத்தித் திட்டங்களை மேற்பார்வை செய்யவென சில நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமித்து அவர்களுக்கு மாதாந்தம் போக்குவரத்துச் செலவுக்கென 2 இலட்சம் ரூபா வரை வழங்குவதற்கான திட்டமொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் யூன் 21ஆம் திகதி முன்வைத்து அது நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாறு 2 இலட்சம் ரூபா மாதாந்தம் பெறப்போகும் 55 'அதிர்ஸ்ட்டசாலிகள்' ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வருகிறது.

மக்களின் வரிப்பணத்தை விரயம் செய்யும் இந்த விடயத்தை எதிரணியைச் சேர்ந்த காமினி லொக்குகே நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தியபோது, காணி மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் கயந்த கருணதிலக அது உண்மைதான் என ஏற்றுக் கொண்டுள்ளார்.

•

## இலங்கை சிவில் சமூகக் குழுக்களுக்கு 1.6 பில்லியன் ரூபா அமெரிக்க (USAID) நிதியுதவி!

இலங்கையிலுள்ள சிவில் சமூக குழுக்களுக்கு அமெரிக்கா 3 வருட தேசிய நல்லிணக்க முயற்சிகளுக்காக புதிதாக சுமார் 1.6 பில்லியன் ரூபாக்களை (160 கோடி) அண்மையில் வழங்கியுள்ளது. ஏற்கெனவே 2009 மே மாதத்தில் போர் முடிவுற்ற காலத்திலிருந்து இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்ற பெயரில் மேற்கத்தைய சக்திகள் இலங்கையின் சிவில் அமைப்புகளுக்கு பலகோடி ரூபாக்களை வாரியிறைத்துள்ளன.

தற்போது வழங்கப்பட்டுள்ள அமெரிக்க நிதி, 'சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க ஏஜன்சி' (USAID) என்ற அமைப்பால் வழங்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான நிதியை இந்த நிறுவனம் உலகிலுள்ள பல நாடுகளுக்கும் கடந்த பல வருடங்களாக வழங்கி வருகின்றது. இலங்கைக்கும் கடந்த 60 வருடங்களாக இந்நிறுவனத்தின்

நிதியுதவி கிடைத்து வருகின்றது. இந்த வகையான நிதியுதவிகளால் இலங்கையில் ஏதாவது நல்லிணக்க முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்றால், "இல்லை" என்றுதான் பதிலளிக்க வேண்டும். இந்த மாதிரியான நிதியைப் பெறும் நிறுவனங்கள் மக்களுக்காக என்ன முயற்சிகளைச் செய்கிறார்கள் என்பதும், இந்த நிதிகள் எவ்வாறு செலவழிக்கப்படுகின்றன என்பதும் புரியாத புதிராக, மூடுமந்திரமாகவே இருந்து வருகின்றன.

இந்த நிதியுதவி குறித்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திடம் 'த ஐலன்ட்' செய்தித்தாள் பின்வரும் இரு கேள்விகளை எழுப்பியதாகவும், ஆனால் அவற்றுக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.

கேள்வி – 1: தயவுசெய்து இந்தத் திட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ள சிவில் சமூகக் குழுக்கள் எத்தனை என்ற விபரத்தைத் தரமுடியுமா?

கேள்வி – 2: நிதியைப் பெறுபவர்களில் வடக்கு கிழக்கை தளமாகக் கொண்ட அமைப்புகள் உள்ளனவா?

'ஐலன்ட்' எழுப்பியுள்ள இந்த முக்கியமான கேள்விகளுக்கான பதிலை பொதுமக்களும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

•

## கியூபாவில் USAID நடவடிக்கைகள் அம்பலம்!

கியூபாவில் USAID அமெரிக்க நிறுவனம் கடந்த இரண்டு வருடங்களாக அந்த நாட்டு இளைஞர்கள் மற்றும் இசைக் கலைஞர்களைப் பயன்படுத்தி நாட்டின் ஸ்திரத்தன்மையைக் குலைக்கவும், அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளை உருவாக்கவும் செய்து வந்த முயற்சிகளை கியூப அரசு கண்டு பிடித்துள்ளதாக அசோசியேட்டட் பிரஸ் (Associated Press) செய்தி நிறுவனத்துக்கு கிடைத்த ஆவணங்கள் மூலம் தெரிய வந்துள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் 2009 டிசம்பர் 3இல், மேற்குறிப்பிட்ட அமெரிக்க நிறுவனத்தின் ஒப்பந்தக்காரரான Alan Gross என்பவர் சட்டவிரோதமான முறையில் செயற்கைக்கோள் மூலமான கைத்தொலைபேசிகளையும், கணனி உபகரணங்களையும் கியூபாவுக்குள் கொண்டு வந்ததிற்காக அந்நாட்டரசால் கைது செய்யப்பட்டார் எனவும் அசோசியேட்டட் பிரஸ் நிறுவனம் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

•

## கனடாவில் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட ஆங் சான் சூகி!

மியன்மார் மக்களின் புகழ்பெற்ற தலைவி ஆங் சான் சூகி (Aung San Suu Kyi) அந்த நாட்டில் ஜனநாயகத்தை மீட்பதற்கு நடத்திய போராட்டத்தைக் கௌரவிக்குமுகமாக அவருக்கு கனடிய அரசாங்கம் தனது நாட்டின் கௌரவப் பிரஜாவுரிமையை வழங்கியிருந்தது.

ஆனால் மியன்மாரில் சிறுபான்மை இனமான ரொகிங்கியா முஸ்லிம் மக்கள் மீது அந்த நாட்டின் இராணுவ ஆட்சி நடத்திய அட்டூழியங்கள் சம்பந்தமாக சூகீ எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காதபடியால் அவர்மீது கனடிய மக்கள் அதிருப்தியும் கண்டனமும் தெரிவித்து வந்தனர். அவருக்கு வழங்கப்பட்ட கனடிய கௌரவ பிரஜாவுரிமையையும் மீளப்பெற வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இந்த நிலைமையில் மனித உரிமைகளுக்கான கனடிய அருங்காட்சியகம் ஆங் சான் சூகீ சம்பந்தமாக தனது வின்னிபெக் நகரக் காட்சியகத்தில் இருந்த குறிப்புகளை நீக்கியுள்ளது. அத்துடன் காட்சியகத்தின் கூடத்தில் வைக்கப்பட்டிருந்த சூகீயின் படத்திற்கான ஒளியின் பிரகாசத்தையும் குறைப்புச் செய்துள்ளது.

கனடிய அருங்காட்சியகத்தின் இந்த முடிவை கனடியத் தலைநகர் ஒட்டாவாவில் வாழ்கின்ற ரொகிங்கிய சமூகத்தின் பிரதிநிதியான Raiss Tinmaung வரவேற்றுள்ளதுடன், "இது நிம்மதியளிக்கும் ஒரு அருமையான சந்தர்ப்பம்" எனவும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தென் ஆபிரிக்க மக்களின் மாபெரும் தலைவர் நெல்சன் மண்டேலாவின் படத்துடன் சூகீயின் படமும் இடம் பெற்றிருப்பது மண்டேலாவுக்கு செய்யும் அவமரியாதையாகும் எனவும் ரொகிங்கிய சமூகப் பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.

•

## அமெரிக்காவின் இராணுவ முகாமாக திருகோணமலை துறைமுகம்

அமெரிக்காவின் இராணுவ முகாமாக, திருகோணமலை துறைமுகத்தை பயன்படுத்துவதற்கு இலங்கை அமெரிக்காவுடன், ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த எதிரணி தெரிவித்துள்ளது. பொரளையில் உள்ள என்.எம்.பெரேரா மத்திய நிலையத்தில் 22.08.2018 இல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே, லங்கா சமசமாஜக்கட்சியின் செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண இதனை தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஒனோடேரா எதற்கு இலங்கை வருகை தந்துள்ளார் எனவும் குறிப்பாக அவர் எதற்கு திருகோணமலை துறைமுகத்தை பார்வையிட்டுள்ளார் என்பது தொடர்பில் அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் இவ்வாறான ஒப்பந்தங்கள் தொடர்பில் நாட்டு மக்களுக்கு அரசாங்கம் தெளிவுப்படுத்த வேண்டும் எனவும், இவ்வாறான ஒப்பந்தங்கள் தொடர்பில் தெரிந்துகொள்வதற்கு மக்களுக்கு உரிமை இருப்பதாகவும் அவர் கூறினார்.

09.07.2017 இல் யாழ். ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதும், 'அமெரிக்காவின் இராணுவ முகாமாக திருகோணமலை துறைமுகம் மாறியுள்ளது. அந்நிய நலனுக்கு எதிராக, தமிழ், சிங்கள, முஸ்லிம் என இன வேறுபாடின்றி போராட முன் வரவேண்டும்' என திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

# மார்க்ஸ், ஏங்கெல்சும் விஞ்ஞானமும்

“மார்க்ஸ், ஏங்கெல்ஸ் இருவரும் விஞ்ஞானத்தில் ஒரே அளவில் அக்கறை கொண்டிருந்தனர். ஆனால் அவர்களிடையே ஒரு வகையான வேலைப் பிரிவினை இருந்தது. பொறி நுட்பவியல், கணிதவியல், வரலாறு, விவசாய வேதியியல் ஆகியவற்றில் மார்க்ஸ் கூடுதலான புலமை பெற்றிருந்தார். இத்துடன் கூட இயற்பியல், வேதியியல், உயிரியல், புவியியல், உடற்கூறியல், மனித உடலியல் ஆகியவற்றையும் அவர் ஆராய்ந்தார். ஏங்கெல்ஸ் போலன்றி அவர் கணிதவியலுக்கும் செயல்முறை விஞ்ஞானிகளுக்கும் அதிக நேரத்தைச் செலவழித்தார். இதற்கு மாறாக, ஏங்கெல்ஸ் இயற்பியல், உயிரியல் இவற்றில் கூடுதலாக ஞானம் கொண்டிருந்தார். அவரும் கூடக் கணிதவியல், வானியல், இரசாயனவியல், உடற்கூறியல், மனித உடலியல் இவற்றை ஆராய்ந்தார். மார்க்சை விடத் தத்துவார்த்த ரீதியான இயற்கை விஞ்ஞானத்தில் அவர் அதிக கவனம் செலுத்தினார்.

(ஏங்கெல்ஸ் எழுதிய இயற்கையின் இயக்கவியல் நூலுக்கு முன்னுரை) மார்க்சிய – லெனினியக் கழகம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு



## மார்க்சின் இன்னொரு நான்

***வீ. பழனி***

மார்க்சால் ‘இன்னொரு நான்’ என்று கூறப்பட்டவர், தொழிற்புரட்சி என்ற சொல்லாடலை உருவாக்கியவர் ஏங்கல்ஸ். தொழிற்புரட்சி நடந்து பூர்சுவா வர்க்கமும் நவீன ஆலைத் தொழிலாளி வர்க்கமும் உருவான சமூகப் பின்னணியில் மார்க்சும் ஏங்கல்சும் பிறந்து வளர்ந்து வந்தனர். ஏங்கல்ஸ் பிறந்த ரைன் பகுதி பருத்தி மற்றும் கம்பளத் தொழில்களின் மையமாக இருந்தது. உலோகத் தொழில்களின் மையமாகவும் உருவாகி வந்தது. ஏங்கல்ஸ் குடும்பம் செல்வமிக்கது. ஏங்கல்ஸ் என்ற சொல்லுக்கு ஜெர்மனியில் பொருள் தேவதை. ஆங்கிலத்தில் உள்ள ஏஞ்சல்ஸ் என்ற சொல்லுக்கு ஈடானது. ஜவுளி தொழிலில் ஈடுபட்ட குடும்பம். சொந்தமான ஜவுளி ஆலைகள் இங்கிலாந்து மான்செஸ்டரில் இருந்தன. இந்த காலத்தில் ஜெர்மனியில் விஞ்ஞானத்திலும் தத்துவத்திலும் வளர்ச்சி ஏற்பட்டுவந்தது. மேலும் ரைன் பகுதி பன்னாட்டுத்தன்மை உடையதாக இருந்தது. மார்க்ஸ், ஏங்கல்ஸ் இருவரும் அப்போதைய ஜெர்மனியில் தலைசிறந்த தத்துவஞானியாக விளங்கிய ஹெகலின் ஆதரவாளர்களாக இருந்தனர். இருவரும் இளம் ஹெகலியர்கள் குழுவில் இருந்தனர். 1844 ஆகஸ்ட் 28 அன்று இருவருக்குமிடையேயான முதல் சந்திப்பு நடந்தது. அன்று முதல் மார்க்சின் மரணம் வரையில் இருவரும் இணைபிரியாத நண்பர்களாக இருந்தனர். “விதி ஒன்று சேர்த்து வைத்த நாளில் இருந்து அவ்விரு நண்பர்களின் தனித்தனி வாழ்க்கை பணியும் அவ்விருவரின் பொதுலட்சியமாகி விட்டது” என்கிறார் லெனின். மனதை உருக்கும் நட்பு குறித்து பல உதாரணங்கள் காட்டும் பழங்கதைகள் உண்டு. தனது விஞ்ஞானத்தை சிருஷ்டித்தவர்கள் இரண்டு அறிஞர்கள். இரண்டு போராட்ட வீரர்கள். “அவர்களுக்கிடையே நிலவிய உறவு முன்னோர்கள் மனித நட்பு பற்றி எழுதியுள்ள நெஞ்சையள்ளும் கதைகளை எல்லாம் மிஞ்சக்கூடியதாக இருந்தது என்று ஐரோப்பிய பாட்டாளி வர்க்கம் பெருமையோடு சொல்லிக் கொள்ளலாம்” என்கிறார் லெனின். “மார்க்ஸ் உயிரோடு இருக்கும்போது அவர்மீது ஏங்கல்ஸ் வைத்திருந்த பாசத்துக்கும், மறைந்த மார்க்சின் நினைவு பற்றி அவர் வைத்திருந்த புனித மதிப்புக்கும் எல்லையே கிடையாது. இந்த கடின சித்தம் உள்ள போராட்ட வீரருக்கு, கட்டுப்பாடு மிகுந்த சிந்தனையாளருக்கு ஆழ்ந்த அன்பு செலுத்தும் இதயமும் இருந்தது” என்று சொல்லிச் செல்கிறார் லெனின்.

### 3,10,000 பக்கம்

இருவருடைய எழுத்துகளும் 40 தொகுப்பு நூல்களாகவும் 3,10,000 பக்கங்களை உடையதாகவும் இருக்கிறது. இருவரும் சேர்ந்து வெளியிட்ட முதல் நூல் வரலாற்று பொருள் முதல்வாதம் குறித்த ஜெர்மன் சித்தாந்தம் என்னும் நூலாகும். இந்நூல் வெளிவந்த ஆண்டு 1845.ஐரோப்பாவில் தோன்றிய முதல் பாட்டாளிவர்க்க அமைப்பாகிய கம்யூனிஸ்ட் லீகின் வேலைத்திட்டமான கம்யூனிஸ்ட் அறிக்கை இருவரும் சேர்ந்து எழுதி 1848 பிப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது. இன்றளவும் உலகப் பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கு ஒளிவிளக்காய் வழி காட்டி நிற்கும் கம்யூனிஸ்ட் அறிக்கை வெளிவந்த போது மார்க்சின் வயது 30, ஏங்கல்சின் வயது 28. கம்யூனிஸ்ட்

அறிக்கை எழுதப்படுவதற்கு அடித்தளமாக அமைந்த நூல் ஏங்கல்ஸ் எழுதிய 'கம்யூனிசத்தின் கோட்பாடுகள்' ஆகும். இன்றைக்கும் உலகின் தலைசிறந்த அரசியல் பொருளாதார அறிவுக்களஞ்சியமாகத் திகழும் மூலதனம் நூலின் முதல் தொகுதி 1867ல் வெளியானது. கார்ல் மார்க்சின் 30 ஆண்டு கால கடின உழைப்பின் பயனாய் இந்த நூல் வெளியானது. இந்த நூலின் இரண்டாவது மூன்றாவது தொகுதிகளை மார்க்சின் மறைவுக்குப் பின்பு ஏங்கல்ஸ் 11 ஆண்டுகள் அரும்பாடுபட்டு தொகுத்து எழுதி வெளியிட்டார். மார்க்ஸ் தனது கடைசி நாட்களில் தனது இளைய மகளிடம் ஏங்கல்ஸ் வேண்டுமானால் இந்த ஆவணங்களைப் பயன்படுத்தி தான்விட்டுச் சென்ற பணிகளைச் செய்து முடிக்கலாம் என்று கூறினாராம். மோசமான கையெழுத்து மட்டுமல்ல, அவரே கண்டுபிடித்த சுருக்கெழுத்து மற்றும் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதப்பட்ட குறிப்புகளைப் முறைப்படுத்தி இரண்டு தொகுதிகளாக ஏங்கல்ஸ் வெளியிட்டார். மூலதனம் நூலின் இந்த இரு தொகுதிகளும் மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகிய இரு மனிதர்களின் படைப்பாகும் என்கிறார் லெனின். மூலதனத்தின் இரண்டாம் தொகுதி 1885லும் (மார்க்ஸ் 1883ல் மறைந்தார்) மூன்றாம் தொகுதி 1894லும் (ஏங்கல்ஸ் 1895ல் மறைந்தார்) ஏங்கல்சால் வெளியிடப்பட்டது. "இரண்டாவது மூன்றாவது தொகுதிகளை வெளியிட்டதின் மூலம் ஏங்கல்ஸ் தனது நண்பராகிய மேதைக்கு மாண்புமிக்க நினைவுச் சின்னம் நிறுவினார். அந்த நினைவுச் சின்னத்தில் தம்மை அறியாமலேயே தமது பெயரையும் அழியாத வகையில் பொறித்து விட்டார்" என்கிறார் ஆஸ்திரிய சமூக ஜனநாயகவாதி ஆட்லெர்.

**தளபதி**

ராணுவம் குறித்தும் அவருக்கு சிறப்பான புலமை இருந்தது. 1870இல் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் இடையே நடந்த போர் குறித்து அவர் எழுதிய கடிதங்கள் பிரபலமானவை மட்டுமல்லாமல், முதலாளித்துவத்திற்கு எதிரான பிரதம தளபதியான மார்க்சின் மறைவிற்கு பின்னர் அவர் சோசலிஸ்ட் படையின் தலைவராக இருந்து போராடியதாலும், மார்க்சின் புதல்விகளாலும் நண்பர்களாலும் "தளபதி" என்று அழைக்கப்பட்டு வந்தார். "அவர் வாழ்ந்த காலத்தின் மிகவும் தலைசிறந்த மனிதர் என்று கருதுகிறேன். கலைக்களஞ்சியம் போன்ற படிப்பாற்றலையும் எல்லா விஞ்ஞான துறைகளிலும் பெரியளவு நவீன ஞானத்தையும் அவர் பெற்றிருந்தார்" என்கிறார் ஏங்கல்சின் உற்ற நண்பர்களில் ஒருவராகிய ஏர்னஸ்ட் பாக்ஸ்.

**நன்றி: தீக்கதிர்**

# நேபாள கம்யூனிஸ்ட் கட்சிகள் முறைப்படி இணைந்தன!

**தெ**ன்னாசிய நாடான நேபாளத்தின் இரண்டு பிரதான கம்யூனிஸ்ட் கட்சிகளான தற்போதைய நேபாள பிரதமர் கே.பி. சர்மா ஒலி தலைமையிலான ஐக்கிய மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், பிரசந்தா தலைமையிலான நேபாள மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து, நேபாள கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் ஒரே கட்சியாக அண்மையில் தம்மை அங்குரார்ப்பணம் செய்து கொண்டன. கட்சிகளின் இணைப்பு முடிவடைந்த பின்னர் வெளியிட்ட அறிக்கையில் மார்க்சிசம் - லெனினிசம் தான் தமது வழிகாட்டும் தத்துவம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய ஒன்றிணைந்த கட்சிக்கு 9 பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தற்போது ஒன்றிணைந்த கட்சியின் இணைத் தலைவர்களாக கே.பி.சர்மா ஒலியும், பிரசந்தாவும் சம அளவான அதிகாரத்துடன் இருப்பார்கள். அடுத்த இரண்டு வருடங்களுக்குள் கட்சியின் தேசிய மாநாடு கூடி புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவார்.

நேபாளத்தில் 2008 இல் பல நூற்றாண்டு கால பழமை வாய்ந்த மன்னராட்சி ஒழிக்கப்பட்டது. மன்னராட்சியை ஒழிப்பதற்காகவும், நேபாளத்தில் ஒரு புதிய ஜனநாயக அரசை நிறுவுவதற்காகவும், பிரசந்தா தலைமையிலான மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சி பல ஆண்டுகளாக ஆயுதப் போராட்டம் நடத்தி, நாட்டின் பல பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. பின்னர் ஐ.நா. தலைமையிலான சமாதானப் பேச்சுவார்த்தையின் பின்னர், மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சி ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு நாடாளுமன்றப் பாதைக்குத் திரும்பியது.

அதன் பின்னர் நடந்த தேர்தலில் மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்று அக்கட்சியின் தலைவர் பிரசந்தா சிறிது காலம் பிரதமராகப் பதவி வகித்தார். ஆனால் போதிய பெரும்பான்மை இல்லாததால் திரும்பவும் தேர்தலுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. கட்சிகளுக்கிடையில் ஐக்கியம் இல்லாததால், 2008 இல் மன்னராட்சி ஒழிக்கப்பட்ட பின்னரரன 10 ஆண்டுகளில் 10 அரசாங்கங்கள் மாறிமாறி ஆட்சியில் இருந்துள்ளன.

இறுதியாக நடந்த தேர்தலில் ஐக்கிய மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியும் தொகுதி உடன்பாடு செய்துகொண்டு போட்டியிட்டன. அதன் காரணமாக, 275 உறுப்பினர்கள் கொண்ட நேபாள நாடாளுமன்றத்தில் இரண்டு கட்சிகளும் இணைந்து 174 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டன. பாரம்பரியமாக இந்தியாவுக்கு சார்பாகச் செயல்பட்டு வந்த நேபாள காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட்டது. அதன் மூலம் நேபாளத்தில் முதல் தடவையாக பெரும்பான்மை பலத்துடன் முற்போக்கான அரசொன்று ஏற்பட்டுள்ளது.

புதிய அரசின் நோக்கம் பற்றிக் குறிப்பிட்ட பிரசந்தா, "சமூக நீதியுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதே தமது நோக்கம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

நேபாள கம்யூனிஸ்ட் கட்சிகளின் இந்த ஐக்கிய நடவடிக்கை பல நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு ஒரு முன்னுதாரணமாக இருப்பதுடன், குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின வளர்ச்சிக்கு ஒரு உந்து சக்தியாகவும் இருக்கும் எனக் கருதப்படுகிறது.

**–ஜோதி**

# தோழர் என்.கே.ரகுநாதன் நினைவாக:
# வரலாற்றைத் திரிப்பது வழக்காகிப்போனது!

சில வாரங்களுக்கு முன்னர் காலமான தோழர் என்.கே.ரகுநாதன் இலங்கையில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும், சிறந்த கல்விச் சிந்தனையாளருமான தோழர் மு.கார்த்திகேசன் அவர்கள் பற்றி எழுதிய நினைவுக் கட்டுரை இந்த இதழில் பிரசுரமாகியுள்ளது. அதேநேரத்தில் தோழர் ரகுநாதன் பற்றியும் இந்த இதழிலேயே எழுத வேண்டிய தேவை உருவாகிவிட்டது. அதற்குக் காரணம், எல்லாமே வியாபாரமாகிவிட்ட சூழலில் தோழர் ரகுநாதன் அவர்கள் இறந்ததும் அவர் பற்றி அவரது நாமத்தைப் புகழுவதாகச் சொல்லிக்கொண்டு கட்டவிழ்த்துவிட்ட மோசடித்தனமான நினைவுகூரல்களும், வார்த்தைகளும்தான்.

தோழர் ரகுநாதன் தன்வாழ்நாள் முழுவதும் மார்க்சிய வழிநின்று செயற்பட்ட ஒரு பொதுவுடமைவாதி என்பது எல்லோரும் நன்கறிந்த ஓர் உண்மை. அவர் தொழில்ரீதியாக ஓர் ஆசிரியராகவும், கலை இலக்கிய ரீதியாக ஓர் முற்போக்கு எழுத்தாளராகவும், அரசியல் ரீதியாக ஓர் கம்யூனிஸ்ட்டாகவும், தன் வாழ்க்கையை நெறிப்படுத்தி வாழ்ந்துவிட்டுச் சென்றவர். அவர் ஒருபோதும் இத்தகைய தன் வாழ்க்கைப் பாதையிலிருந்து தடம் புரண்டவர் அல்லர்.

முற்போக்குப் பேசிய சிலர் தமிழ் தேசியப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருக்கொண்ட பின்னர் அதன் அலையுடன் அடித்துச் செல்லப்பட்ட சம்பவங்களும் நடந்ததுண்டு. இன்னும் சிலர் பிரத்தியேகமான அரச பதவிகள் பெற்றுச் சுகித்திருந்த வரலாறும் உண்டு. இன்னும் சிலர் குடும்பச் சுமை வந்ததும் அரசியலிலிருந்தும், பொது வாழ்க்கையிலிருந்தும் ஒதுங்கிக் கொண்ட சம்பவங்களும் நிகழ்ந்ததுண்டு. ஆனால் தோழர் ரகுநாதன் அப்படி அடி சறுக்கிய ஒருவர் அல்ல.

தோழர் ரகுநாதன் மிகவும் குறைவாகவே எழுதினார். அவரது முதல் சிறுகதைத் தொகுதியான "நிலவிலே பேசுவோம்" என்ற நூலில் இடம் பெற்ற அந்தத் தலைப்பிலான சிறுகதையே பலரதும் கவனத்தை ஈர்த்து அவருக்கு ஒரு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தது. இரண்டாவது சிறுகதைத் தொகுதி "தசமங்கலம்" என்ற பெயரில் வெளியாகி இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றது. இவை தவிர "ஒரு




பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி" என்ற சுயசரிதை சார்ந்த நாவல் ஒன்றையும் அவர் எழுதி வெளியிட்டுள்ளார். அவர் குறிப்பிடும் அந்தக் கிராமம் அவர் பிறந்து வளர்ந்த பருத்தித்துறைக்கு அண்மையில் உள்ள வராத்துப்பளை என்ற கிராமமாகும்.

**சுப்பராயன்**

இவையெல்லாவற்றையும் விட அவரை மக்கள் மத்தியில் நேரடியாக இட்டுச் சென்றது அவர் எழுதி, நெல்லியடி "அம்பலத்தாடிகள்" அரங்கக் குழுவினரால் மேடையேற்றம் செய்யப்பட்ட "கந்தன் கருணை" என்ற இசை வடிவ நாடகமாகும். இந்த நாடகம் வட பகுதியில் 1960களில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியால் முன்னெடுக்கப்பட்ட ஆலயப் பிரவேச — தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டத்தின் போது நடைபெற்ற பிரபலமான மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேசப் போராட்டத்தை மையமாக வைத்து எழுதப்பட்டதாகும். இது அந்தக் காலகட்டத்தில் ஏராளமான தடவைகள் மேடையேற்றம் செய்யப்பட்டு, தாழ்த்தப்பட்ட மக்களின் சாதியத்துக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டத்துக்கு பெரும் உத்வேகத்தை அளித்தது. இலங்கையில் வேறு எந்தவொரு இலக்கிப் படைப்பும் "கந்தன் கருணை" அளவுக்கு ஒரு மக்கள் போராட்டத்துடன் தொடர்பு பட்டிருக்கவில்லை எனத் துணிந்து கூறலாம்.

தோழர் ரகுநாதன் மட்டுமின்றி, வட பகுதியில் ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த ஏராளமான எழுத்தாளர்கள் - கே.டானியல், டொமினிக் ஜீவா, யோ.பெனடிக்ற்பாலன், எஸ்.அகஸ்தியர், செ.யோகநாதன், தெணியான், கே.ஆர்.டேவிட், பசுபதி எனப் பலர் முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் பெரும் தூண்களாக இருந்திருக்கின்றனர்.

இவர்கள் அனைவருமே முற்போக்கு இலக்கியத்தை வரித்துக் கொண்டது எதேச்சையாக நிகழ்ந்ததோ அல்லது வெளியில் இருந்து திணிக்கப்பட்டதோ அல்ல. மாறாக இவர்கள் தமது சமூக விடுதலைக்கான மார்க்கத்தைத் தேடியலைந்த போது, பல்வேறு வழிகளைப் பரீட்சித்துப் பார்த்து, இறுதியாக மார்க்சியமே தமது வழி என்றும், அதைப் பிரயோகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சியே தமது செயல் களம் என்றும் கண்டு அதனுடன் இணைந்து செயற்பட்டதுடன், அது காட்டிய செல்நெறியில் தமது இலக்கியத்தையும் படைத்தவர்கள்.

இவர்கள் ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் இயல்பாகவே இவர்களது இலக்கியங்களில் வர்க்க ஒடுக்குமுறைக்கெதிரான உணர்வுடன், சாதிய ஒடுக்குமுறைக்கெதிரான உணர்வும் ஊடுருவி நின்றதுடன், அதை வெறும் சாதியக் கண்ணோட்டத்துடன் அணுகாமல் வர்க்கக் கண்ணோட்டத்துடன் எழுதியவர்கள். கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து நின்றதன் காரணமாகவே இத்தகைய எழுத்தாளர்கள் தமது சமூகம் கடந்து, இனம் கடந்து, தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் அந்தஸ்துப் பெற்றவர்கள்.
இத்தகைய எழுத்தாளர்களில் ஓரிருவரைத் தவிர ஏனைய அனைவரும் தமது இறுதி மூச்சுவரை கம்யூனிஸ்ட் இயக்கத்துடனேயே இருந்தவர்கள். ஆனால் இத்தகைய எழுத்தாளர்கள் மரணித்த பின்னர் அவர்களைத் தரமிறக்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன. உதாரணமாக, தோழர் கே.டானியல் மரணித்த பின்னர் அவரைப் பற்றிக் கதைப்பவர்கள் அனைவரும் அவரை "தலித் இலக்கிய முன்னோடி" என விளித்து எழுதி வருகின்றனர். ஒருவராவது மறந்தும் அவரை ஒரு "கம்யூனிஸ்ட்" என்று விளிப்பதில்லை. அதன் மூலம் அவரது உண்மையான பிம்பத்தை மறைப்பதுடன், அவர் மீது மறைமுகமாக சாதி ரீதியான முத்திரையும் குத்துகின்றனர்.

டானியலுக்கு நடந்த அதே கைங்கரியம் இப்பொழுது தேழர் ரகுநாதன் மரணித்த பின்னர் அவருக்கும் நடக்கிறது. அவரைப்

பற்றி எழுதிய சில ஊடகங்கள் அவரை "சமூக விடுதலைப் போராளி", என்றும், "தலித் இலக்கிய முன்னோடி" என்றும் விளித்தெழுதுகின்றன.. இங்கும் டானியலுக்கு நடந்த அதே முத்திரை குத்தல் நடைபெறுகின்றது. தோழர் ரகுநாதனின் ஆதாரசுருதியான "கம்யூனிஸ்ட்" என்ற அடையாளம் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்படுகிறது. சில வேளைகளில் இந்த முத்திரை குத்தல் தோழர் டொமினிக் ஜீவாவுக்கும் பின்னர் நடக்கலாம்.

இங்கு கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில், ஏனைய பல முற்போக்கு எழுத்தாளர்களும் தமது படைப்புகளில் தொழிலாளர்கள் - விவசாயிகள் பிரச்சினையுடன், வர்க்க ரீதியாகவும் சாதி ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்சினை பற்றியும் எழுதி இருக்கின்றனர். ஆனால் அவர்களுக்கு எந்தவித சாதீய அடையாள முத்திரையும் குத்தாத இந்த 'இலக்கிய விமர்சக ஜம்பவான்கள்', ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்து முற்போக்கு இலக்கியம் படைத்தவர்களுக்கு மட்டும் சாதீய முத்திரை குத்துவதன் நோக்கம் என்ன? துல்லியமாக ஆராய்ந்து பார்த்தால் இதுவும் ஒரு சாதீய மனோபாவத்தின் வெளிப்பாடுதான்.

முற்போக்கு இலக்கியம் தமிழ் மண்ணில் முகிழ்த்தெழுந்த காலத்தில் பழமைவாதிகளும், சனாதனியர்களும், முற்போக்கு இலக்கியத்தை "இழிசனர் இலக்கியம்", "கொச்சைத் தமிழ் இலக்கியம்" (பண்டிதத் தமிழை விடுத்து பேச்சுவழக்கில் எழுதப்பட்டதால்) என்று வசைபாடியதுடன், கேலியும் செய்தனர். ஆனால் காலப்போக்கில் அந்த வசை பாடல்களும், அதைப் பாடியவர்களும் காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டனர்.

இப்பொழுது புதிய சனாதனியர்கள் தோழர்கள் டானியல், ரகுநாதன் போன்றவர்களின் முழு மானிட நேயத்தையும் அளாவிய முற்போக்கு எழுத்துக்களை வெறுமனே "தலித் இலக்கியம்" என வரையறுப்பது அவர்களுக்குச் செய்யும் அவமரியாதை மட்டுமின்றி, முழு முற்போக்கு இலக்கியத்தையும் இழிவு செய்வதுமாகும். இந்த வரையறுப்பு வெளிப்பார்வைக்கு அவர்களை பெருமைப்படுத்துவது போலத் தோன்றினாலும், உண்மையில் அவர்களை இழிவுபடுத்துவதாகும்.


இந்த இழிவான செயலில் ஈடுபடுபவர்களில் அந்தரங்கமான பிற்போக்கு நோக்கம் கொண்டவர்கள், விவரம் அறியாவர்கள் ஆகியோர் மட்டுமின்றி, சில 'முற்போக்கு' முலாம் பூசியவர்களும் இருப்பதுதான் கண்டனத்துக்குரியதாகும்.

தோழர்கள் டானியல், ரகுநாதன் போன்றவர்கள் வெறும் "தலித் எழுத்தாளர்கள்" அல்ல, அவர்கள் பெருமைக்கும் புகழுக்கும் உரிய "முற்போக்கு எழுத்தாளர்கள்" என நாம் முரசறைந்து, உறுதியுடன், உரத்துச் சொல்ல வேண்டும்.

# குல்தீப் நய்யார் காலமானார்!

**த**லைசிறந்த பத்திரிகையாளரும் மனிதஉரிமைப் போராளியும் மாநிலங்களவை யின் முன்னாள் உறுப்பினருமான குல்தீப் நய்யார் தனது 95வது வயதில் காலமானார். குல்தீப் நய்யார் 1923ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் தேதியன்று அன்றைய பிரிட்டிஷ் பஞ்சாபில் சியால்கோட் என்ற ஊரில் குர்பக்ஸ் சிங் - பூரான் தேவி தம்பதியினருக்கு மகனாக பிறந்தார். லாகூரில் பி.ஏ (ஹானர்ஸ்) மற்றும் எல்.எல்.பி சட்டப் படிப்பை முடித்த அவர் பத்திரிகைத்துறையில் கொண்ட ஆர்வம் காரணமாக முதன் முதலாக ஒரு உருது பத்திரிகையில் செய்தியாளராக தனது பத்திரிகையாளர் வாழ்க்கையைத் தொடங்கினார். உருது பத்திரிகையின் செய்தியாளராக இருந்த குல்தீப், 'தி ஸ்டேட்ஸ்மேன்' பத்திரிகையின் தலைநகரின் தில்லி பதிப்பில் ஆசிரியராக பணி புரிந்த பெருமை கொண்டவர்.

இதனைத்தொடர்ந்து 80 செய்தி நாளிதழ்களில் சிறப்பு பத்தி எழுத்தாளராகவும் கட்டுரையாளராகவும் 14 மொழிகளில் எழுதியுள்ளார். இவற்றில் டெக்கான் ஹெரால்ட், தி சன்டே கார்டியன், தி நியூஸ், தி ஸ்டேட்ஸ்மேன், தி எக்ஸ்பிரஸ் டிரிபியூன், பிரபா சக்தி போன்றவை முக்கியமான பத்திரிகைகளாகும்.



நாட்டில் எங்கு மனித உரிமை மீறல்கள் நடந்தாலும், பத்திரிகையாளர்களின் சுதந்திரம் பாதிக்கப்பட்டாலும் அதை எதிர்த்து கடுமையான கண்டனங்களை பதிவு செய்வார். நாட்டின் இருண்டகாலமான அவசர நிலை அறிவிக்கப்பட்டபோது அதை கடுமையாக எதிர்த்ததால் (1975–77) கைது செய்யப்பட்டார்.

இந்தியா - பாகிஸ்தான் பிரச்சனைகளை பேச்சுவார்த்தைகள் மூலமாக தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். அமைதி மண்டலமாக தெற்காசியா திகழ வேண்டும் என்றும் தனது எழுத்துகள் மூலமாக தெரிவித்து வந்தார். 1990இல் கிரேட் பிரிட்டனுக்கு ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டார். 1996இல் ஐ.நாவிற்கு இந்திய தூதுக்குழுவில் சென்றார். 1997இல் மாநிலங் களவையின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார். பத்திரிகைச் சுதந்திரத்திற்காக பாடுபட்டதால் 2003இல் 'ஆஸ்தர் அவார்டு' (பத்திரிகை சுதந்திரத்திற்கான விருது) வழங்கப்பட்டது. வாழ்நாள் சாதனையாளர் பரிசாக 'சாஹித் நியோகி' நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

**5ம் பக்கத்தொடர்ச்சி....**

இரண்டரை இலட்சம் ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு இந்த சுத்திகரிப்பு வேலை ஒரு நிறுவனத்திடம் வழங்கப்பட்டு இருந்தது. இப்போதைய ஒப்பந்தப் பிரகாரம் அது மாதாந்தம் மூன்றரை இலட்சமாக உயரந்துள்ளது. இதற்கும் எதிர்ப்பு வந்தாலும் யானைப் பாசறை அம்மையார் எடுத்த காரியத்தை முடிக்காமல் இருக்கமாட்டார் என நம்பலாம்.

முதலாளித்துவ அரசியல்வாதிகள் பதவிக்கு வந்தவுடன் செய்யும் முதல் வேலை மக்களின் வரிப்பணத்தில் கொழுத்த சம்பளங்களைப் பெறுவது மட்டுமின்றி ஆடம்பரங்களையும் தேடிக்கொள்வதுதான். அத்துடன் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு தாம் பொறுப்பாக இருக்கும் நிறுவனத்தின் ஒப்பந்த வேலைகளை வழங்கி அதன் மூலமும் பணம் சம்பாதித்துக் கொள்வார்கள்.

இது அவர்கள் எல்லோரினதும் எழுதப்படாத நடைமுறை விதி.

**முன்பக்கத் தொடர்ச்சி...**

ஆட்சிக்கு வந்தவுடனேயே 1977இல் தமிழ் மக்களுக்கு எதிரான பாரிய வன்செயலைக் கட்டவிழ்த்துவிட்டார். இதர பகுதி மக்கள் மீதும் கடுமையான அடக்குமுறை ஏவப்பட்டதுடன், 1978இல் சர்வாதிகாரத்தனமான அரசியல் அமைப்பும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

ஜே.ஆரின் அரசு 1981இல் மலையகத் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளிலும் அவர்களுக்கெதிரான இனவன்செயலைக் கட்டவிழ்த்துவிட்டது.

பின்னர் அதுவரை காலமும் நிகழ்ந்த வன்செயல்களுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல 1983 யூலையில் தமிழ் மக்கள் மீது வரலாறு காணாத இனவன்செயலை அவரது அரசு கட்டவிழ்த்துவிட்டு, பல நூறு உயிர்களைக் காவு கொண்டது.

அத்துடன் நின்றுவிடாது ஜே.ஆர்.அரசு தனது ஏகாதிபத்திய எஜமானர்களின் ஆலோசனைப்படி தமிழ் மக்கள் மீது நேரடி இராணுவ ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. இதே சர்வதேச – பிராந்திய வல்லாதிக்க சக்திகள் மறுபுறத்தில் தமிழ் பிற்போக்கு சக்திகளின் பின்னால் இருந்து நாட்டைப் பிரிக்கும் போராட்டத்தையும் தூண்டிவிட்டன. அதன் மூலம் 30 வருடங்களாக உள்நாட்டுப் போர் ஒன்றை உருவாக்கி நாட்டை எல்லா வழிகளிலும் அழித்து நாசம் செய்தன.

இந்த யுத்த காலத்தில் எப்படித் தமிழ் இளைஞர்கள் தனிநாட்டுக்கான போராட்டம் என்ற போர்வையில் யுத்தகளங்களில் ஆயிரக்கணக்கில் அழிக்கப்பட்டார்களோ, அதேபோல் 1988 – 89 காலகட்டத்தில் ஜே.வி.பி. என்ற எதிர்ப்புரட்சிகர இயக்கத்தின் மூலம் தவறான ஆயுதப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு பல்லாயிரக்கணககான சிங்கள இளைஞர்களும் அழிக்கப்பட்டனர். ஆக, ஏககாலத்தில் தனிநாட்டுப் போராட்டம் என்று சொல்லியும், புரட்சி என்று சொல்லியும் இலங்கையின் பெரும் தொகையான இளைஞர் சக்தி திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளது.

இந்த வல்லாதிக்க சக்திகள் நாட்டைப் பிரிப்பதற்கான யுத்தத்தில் ஈடுபட்ட பிரிவினைவாத சக்திகளுக்கு அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் உதவி செய்த அதேநேரத்தில், மறுபுறத்தில் அரச இராணுவத்துக்கு சகல வழிகளிலும் உதவி பிரிவினைவாதிகளை அழிக்கவும் உதவினர். இது இரு எதிரெதிரான சக்திகளை ஒரே நேரத்தில் பயன்படுத்தி ஒரு நாட்டைச் சீரழிக்கும் புதியவகை ஏகாதிபத்தியத் தந்திரோபாயமாகும்.

பிரிவினைவாதிகளை ஒழித்துக்கட்டி, நாட்டின் தேசிய சுதந்திரம், சுயாதிபத்தியம், பிரதேச ஒருமைப்பாடு என்பனவற்றை மீண்டும் பாதுகாத்து, நாட்டை புதியதொரு பொருளாதார சுபீட்சத்தை நோக்கி இட்டுச் செல்கையில், தாமே பிரிவினைவாதிகளுக்கு எதிரான போரில் அரசை ஆதரித்து சகல உதவிகளும் வழங்கிவிட்டு, பின்னர் அரசு மீது போர்க்குற்றச்சாட்டு, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு என்பனவற்றைச் சுமத்தி, இறுதியில் அதை வைத்தே இலங்கையில் தமக்குச் சார்பான ஆட்சி மாற்றம் ஒன்றையும் இந்த வல்லாதிக்க சக்திகள் செய்து முடித்துள்ளனர்.

அந்த ஆட்சி மாற்றத்தின் மூலம் இலங்கையின் வளங்களைக் கொள்ளையிடுவது ஒருபுறமிருக்க, இலங்கையைத் தமது உலகளாவிய இராணுவ மூலோபாயத் திட்டத்துடன் இணைப்பதற்கும் திட்டமிட்டு வேலை செய்கின்றனர். ஆனால் அவர்களது திட்டங்களை மக்கள் இனம்கண்டு, அவற்றை அமுல்படுத்தும் கருவியாகச் செயல்படும் தற்போதைய ரணில் – மைத்திரி அரசை மக்கள் எதிர்க்க ஆரம்பித்ததும், இலங்கையில் பலவிதமான சூழ்ச்சிகரமான திட்டங்களைச் செயற்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

அரசியல் ரீதியாக அதற்காகப் பல நடவடிக்கைகளை அவர்கள் எடுத்து வருகின்றனர்.

பிரிவினைவாத, பயங்கரவாத, பாசிச பிரிவினைவாத சக்திகளைத் தோற்கடித்த அரசியல் தலைமையையும், களத்தில் போராடிய வீரர்களையும் பழிவாங்கும் எண்ணத்துடன் அவர்கள் மீது பொய்யான வழக்குகளைத் தொடுத்து அவர்களைத் தொல்லைக்கு உள்ளாக்குகின்றனர்.

நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் உருவாக வேண்டும் என்று சொல்லிக்கொண்டே, சில வெளிநாட்டு சக்திகள் சிங்கள – தமிழ் – முஸ்லிம் தீவிரவாத சக்திகளுக்குப் பின்னால் இருந்து ஆதரவளித்து நாட்டில் மீண்டும் இனமோதலை உருவாக்க முயல்கின்றன.

அதுமாத்திரமின்றி, தென்னிலங்கையிலும், வடக்கிலும் பலவிதமான பாதாள உலகக் குழுக்கள், அராஜகக் குழுக்கள் என்பனவற்றை உருவாக்கி, யுத்தத்தை முடிவுகட்டியதால் கிடைத்த அமைதியான வாழ்க்கையை மக்கள் வாழவிடாமல் அச்சத்தில் தவிக்க வைத்துள்ளனர்.

பொதுவாக இளம் சந்ததியினர்தான் சமூக நீதிக்கான போராட்டங்களில் முன்நிற்பர். அப்படியானவர்களைத் திசைதிருப்புவதற்காக இளைஞர்கள், மாணவர்கள் மத்தியில் திட்டமிட்ட முறையில் போதைப் பொருள் பாவனை நாடு பரந்த ரீதியில் ஊக்குவிக்கப்படுகிறது.

இவ்வாறு இலங்கையின் வரலாற்றை எடுத்து நோக்கினால் ஏகாதிபத்திய சக்திகளும், அவர்களுடைய உள்நாட்டு அடிவருடிகளும் இணைந்து நாடு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இலங்கையைத் தமது வேட்டைக்களமாக மாற்றுவதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுத்து வருவதை அவதானிக்க முடியும்.

இந்தப் பிற்போக்கு சக்திகளின் சகலவிதமான நடவடிக்கைகளையும் மக்களின் ஆதரவுடன் முறியடித்துத்தான், 1956, 1970, 1994, 2000, 2005, 2010 ஆகிய ஆண்டுகளில் ஏகாதிபத்திய விரோத, தேசபக்த சக்திகள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளன. அதன் மூலம் இலங்கையின் தேசிய சுதந்திரம், பொருளாதாரம், கலாச்சாரம் என்பனவற்றையும், சாதாரண மக்களின் வாழ்வுரிமைகளையும் ஓரளவாவது பாதுகாக்க முடிந்தது.

ஆனால் 2015 ஜனவரி 8இல் அரசியல் சூழ்ச்சிகளின் மூலம் ஏகாதிபத்திய சார்பு அரசொன்றைப் பதவியில் இருத்தியதின் மூலம், அதுவரைகாலமும் முற்போக்கு அரசுகளால் ஏற்படுத்தப்பட்ட நாட்டுக்குச் சார்பான, மக்களுக்குச் சார்பான முன்னேற்றங்கள் அத்தனையையும் தலைகீழாக மாற்றியமைக்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

எனவே முற்போக்கு – தேசபக்த சக்திகளினதும், நாட்டை நேசிக்கின்ற மக்களினதும் இப்போதைய கடமை, இனி வரப்போகின்ற மாகாணசபை, நாடாளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்களில் அவைரும் ஓரணியாக உறுதியுடன் நின்று தற்போது ஆட்சியில் இருக்கும் ஏகாதிபத்தியத்தாலும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. போன்ற இனவாத சக்திகளாலும் ஆதரிக்கப்படுகின்ற ரணில் - மைத்திரி அரசைத் தோற்கடிப்பதுதான்.

இனம், மொழி, மதம், பிரதேசம், அரசியல் வேறுபாடு கடந்து இந்தத் தேசியக் கடமை நிறைவேற்றப்பட வேண்டும்.

# மாகாண சபைகள் எல்லை நிர்ணய அறிக்கை நிராகரிக்கப்பட்டது!

இலங்கை நாடாளுமன்றில் அனுமதி பெறுவதற்காக முன்வைக்கப்பட்ட மாகாணசபைகள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை பெரும்பான்மை வாக்ககளால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே காலம் முடிவடைந்த மற்றும் இவ்வருடத்துக்குள் காலம் முடிவடைய இருக்கும் மாகாணசபைகளுக்கான தேர்தலைத் தோல்விப் பயம் காரணமாக உரிய காலத்தில் நடத்தாது 'நல்லாட்சி' அரசாங்கம் இழுத்தடித்து வரும் சூழ்நிலையில், இந்த அறிக்கை மேலும் தாமதத்தை உண்டு பண்ணும் என்ற வகையிலும், சிறுபான்மை இனங்களின் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் என்ற வகையிலும் தோற்கடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த அறிக்கையின் பிரகாரம் மாகாண சபைகள் தேர்தல் நடந்தால் அது மக்களை உண்மையில் பிரதிநிதித்துவப்படுத்தாது என கூட்டு எதிர்க்கட்சி முன்னரே தெரிவித்திருந்தது.

225 பேர் கொண்ட நாடாளுமன்றத்தில் இந்த அறிக்கையை நிறைவேற்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவையென்ற நிலையில், 139 உறுப்பினர்கள் அறிக்கையை எதிர்த்து வாக்களித்துள்ளனர். ஆரம்பத்தில் கூட்டு எதிரணி மட்டும் அறிக்கையை எதிர்த்து வாக்கிளிக்கும் என்ற நிலை இருந்தது. ஆனால் வேடிக்கை என்னவெனில், அரசாங்கத்தை நடத்திவரும் இரண்டு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசிய முன்னணியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட அறிக்கையை எதிர்த்து வாக்களித்தன. இன்னொரு வேடிக்கை என்னவெனில், அறிக்கையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த மாகாணசபைகள் மற்றும் உள்ரூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவும் அறிக்கையை எதிர்த்து வாக்களித்ததுதான்! அத்துடன் அரசாங்கத்தில் அங்கம் வகிக்காத போதும், அதன் பங்காளி போலச் செயற்படும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அறிக்கையை எதிர்த்து வாக்களித்தது.

ஆனால், அரசாங்கத்தின் இன்னொரு அந்தரங்க பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. அறிக்கையை ஆதரித்து உரையாற்றிய போதும், வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் மட்டுமின்றி, அறிக்கையை ஆதரித்த எவரும் கூட வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இந்த அறிக்கையை ஆதரித்ததின் மூலம் ஜே.வி.பியின் மக்கள் விரோத, சிறுபான்மை இனங்கள் விரோத நிலைப்பாடு மீண்டும் ஒருமுறை அம்பலமாகியுள்ளது.

இந்த அறிக்கை மீது உரையாற்றிய அமைச்சரும், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம், இந்த அறிக்கை சம்பந்தமாக தாங்கள் முன்வைத்துள்ள திருத்தங்கள் ஏற்கப்படாவிடின், அரசாங்கத்திலிருந்து வெளியேறவும் தாங்கள் தயங்கமாட்டோம் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## ஜே.வி.பியின் கோரிக்கை நியாயமானதுதான், ஆனால்...

ஜே.வி.பி. தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசநாயக்க அண்மையில் நாடாளுமன்றத்தில் பேசும்போது, கடந்த ஆட்சிக்காலத்தில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கொல்லப்பட்ட தமது கட்சியின் இரு உறுப்பினர்களின் கொலை சம்பந்தமாக உரிய விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என வலிறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறார். அத்துடன் கடந்த ஆட்சிக் காலத்தில் நடத்தப்பட்ட இவ்வாறான பல கொலைகள் குறித்து விசாரணை எதுவும் நடத்தப்படாது இழுத்தடிக்கப்படுவதாகவும் குறை கூறினார்.

ஜே.வி.பி. தலைவரின் கோரிக்கை நியாயமானது என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. ஆனால், தமது உறுப்பினர்களுக்காக நீதி கோரும் அவரிடம் வேறு சில கேள்விகள் கேட்கப்பட வேண்டி உள்ளது.

அதாவது, நாட்டில் இடம்பெற்ற 30 வருடப் போரின்போது, பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களை – குறிப்பாக தமிழ் - முஸ்லிம் மக்களை, இலங்கை அரச இராணுவம் படுகொலை செய்துள்ளது. அதேபோல பல்லாயிரக்கணக்கான சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களை விடுதலைப் புலிகள் கொலை செய்துள்ளனர். அவைபற்றி ஜே.வி.பி. ஏன் பேசுவதில்லை?

அத்துடன், ஜே.வி.பி. 1971இலும், 1988 – 89 காலகட்டத்திலும் நடத்திய ஆயுதக் கிளர்ச்சிகளின் போது அரச இராணுவம் ஜே.வி.பி. உறுப்பினர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைக் கொலை செய்தது. அதுபற்றி ஏன் ஜே.வி.பி. வாய் திறப்பதில்லை?

அதுமட்டுமின்றி, 1988 – 89 காலகட்டத்தில் ஜே.வி.பி. தம்மை எதிர்த்த பல நூற்றுக்கணக்கான பொதுமக்களைக் கொலை செய்துள்ளது. அதுபற்றியும் ஜே.வி.பி. விசாரணை நடத்தக் கோரலாமே?

'நல்லாட்சி' அரசுக்கு முண்டு கொடுக்கும் பணியைச் செய்துவரும் ஜே.வி.பியினால் கடந்த ஆட்சிக்காலத்தில் அரசியல் போட்டியாளர்களினால் கொலை செய்யப்பட்ட தமது இரு உறுப்பினர்களுக்கு மட்டும்தான் நியாயம் கோரமுடியும் போல.

அரச படைகளாலும், புலிகளாலும், தம்மாலும் நிகழ்த்தப்பட்ட பல்லாயிரக்கணக்கான கொலைகள் நீதியான கொலைகள் என ஜே.வி.பியினர் கருதுகின்றனர் போலும்!

## ரொறன்ரோவில் மார்க்ஸ் 200ஆவது பிறந்த தின வைபவம்

மார்க்சியத்தின் தந்தை கார்ல் மார்க்ஸ் அவர்களின் 200ஆவது பிறந்த தினத்தையொட்டி கனடாவில் உள்ள ரொறன்ரோ தமிழ் சங்கம் ஏற்பாடு செய்த கருத்தரங்கு ஸ்காபரோ நகரில் உள்ள சங்க மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. கருத்தரங்கிற்கு பெரும் புலவர் முகமத் ஹன்சீர் அவர்கள் தலைமை வகித்தார்.

கருத்தரங்கில் கனடிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்ராறியோ மாகாணத் தலைவர் தோழர் டேவ் மக்கி (Dave Mckee) பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டு, "21ஆம் நூற்றாண்டில் மார்க்கியத்தின் பிரயோகம்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

அவரைத் தொடர்ந்து தோழர்கள் க.தவபாலன், எஸ்.பாலசுப்பிரமணியம் ஆகியோர் முறையே, "உலகப் பொருளாதார நெருக்கடி குறித்த கார்ல் மார்க்சின் எதிர்வு கூறல்கள்", "மார்க்சியமும் கலாச்சாரமும்" என்ற தலைப்புகளில் உரையாற்றினர்.

சபையோர் கருத்துக் கூறலின் போது, வெற்றிவேல், மகேஸ்வரராஜா, ஜேம்ஸ், கந்தவேள், மணியம் ஆகியோர் கருத்துக்கள் தெரிவித்தனர்.

நிகழ்வின் முடிவாக டாக்டர் லம்போதரன் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

# கியூபாவை தெரிந்து கொள்ளுங்கள்: *இறையாண்மை உள்ள மக்கள்!*

**கா**ஸ்ட்ரோ சகோதரர்களின் முழு முற்றான சர்வாதிகாரத்தின் கீழ், கியூப கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் கொடுங்கோன்மை ஆட்சியின் கீழ், கியூப மக்கள் ஒடுக்கப்பட்டிருப்பதான கற்பனையில் இருப்பவர்களுக்கு சில தகவல்கள்:

புரட்சி வெற்றியடைந்த சில மாதங்களிலேயே காஸ்ட்ரோ தேர்தல் நடத்துவதைப் பற்றி மக்களிடம் ஒப்புதல் கேட்டபோது, "வேண்டவே வேண்டாம்" என்று அவர்கள் தீர்மானமாகத் தெரிவித்தார்கள். ஆட்சி அதிகாரம் கொண்ட சிலரின் கீழ் மக்கள் சிக்கித் துன்புற்ற வரலாறும், பசியும் பட்டினியும், சமூக ஏற்றத்தாழ்வுகளும், கல்வி இன்மையும் அவர்களின் நினைவைவிட்டு அகன்றுவிடவில்லை. இந்தக் கேள்வி கேட்கப்பட்ட போதெல்லாம் இதே பதிலைத்தான் மக்கள் அளித்தார்கள். அதனால் 1976ஆம் ஆண்டு புதியதோர் அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர், முதல் நாடாளுமன்றத் தேர்தல் கியூபாவில் நடைபெற்றது. கியூபா 169 முனிசிபாலிட்டிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கியூபாவில் அதிகபட்ச அதிகாரம் படைத்த அரசியல் அமைப்பு முனிசிபாலிட்டிகளே.

(அ) மக்கள் மன்றங்கள் கை உயர்த்தி பிரதிநிதிகளைத் தெரிவு செய்வார்கள்.

(ஆ) பிரதிநிதிகள் கூடி இரகசிய வாக்கெடுப்பு மூலம் முனிசிபாலிட்டிக்கு பிரதிநிதிகளைத் தேர்வு செய்வார்கள். இவர்கள் முறையாகப் பணியாற்றவில்லை என்றால் அவர்களை மறுதேர்வு மூலம் வெளியேற்றிவிட முடியும்.

(இ) பிரிதிநிதிகள் கூடி தலைவர், துணைத் தலைவர் பதவிக்கு இருவரைத் தேர்வு செய்வார்கள். இவர்களுக்கு அரச ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கப்படும். பதவிக்கு வராத மற்ற பிரதிநிதிகள் சமூகப் பணி செய்வார்கள்.



ஆர்னால்டு ஆகஸ்ட் (Arnold August)

(ஈ) மொத்த பிரதிநிதிகளில் 50 வீதம் பேர் மாகாண சபைக்குச் செல்வார்கள். 50 வீதம் பேர் தேசிய சபைக்குச் செல்வார்கள்.

(உ) தேசிய சபையின் 50 வீதம் உறுப்பினர்கள் நேரடியாக 6 மக்கள் திரள் அமைப்புகளால் முன்மொழியப்படுவார்கள். அவை:

1) கியூப மத்திய தொழிலாளர் சங்கம்

2) கியூப பெண்கள் கூட்டமைப்பு

3) சிறு விவசாயிகள் தேசிய சங்கம்

4) பல்கலைக்கழகத்தில் நுழையும் வயதிலுள்ள மாணவர் கூட்டமைப்பு

5) பல்கலைக்கழக மாணவர் கூட்டமைப்பு

6) புரட்சிப் பாதுகாப்பிற்கான மன்றங்கள் (Committees for the Defence of the Revolution)

பொருளாதாரம், உற்பத்தி, சேவை நிறுவனங்கள் ஆகியவற்றை முனிசிபாலிட்டிகளே நிர்வகிக்கின்றன.

மருத்துவம், மக்களுக்கான பகிர்மானத் திட்டங்கள், கல்வி, பண்பாடு, விளையாட்டு, பொழுதுபோக்கு ஆகியவை முறையாக நடைபெறுவதை உறுதி செய்யும் பொறுப்பு முனிசிபாலிட்டிகள் உடையது.

கியூபாவில் தேசிய சபையும், மக்கள் திரள் அமைப்புகளும் சட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கின்றன. கியூப மந்திரிசபையும், மாகாண சபையும் சட்டங்களை இயற்றுகின்றன. புரட்சியின் தலைவர்கள் இன்று எண்பது வயதைக் கடந்தும் பதவிகளில் நீடிக்கின்றனர். ஆனால் அவர்கள் ஆணையிட்டு நிர்வாக அமைப்பு இயங்குவதில்லை.

ஏழாண்டு காலம் கியூபாவில் தங்கியும், 15 ஆண்டு காலம் ஆய்வு செய்தும் Cuba and its Neighours: A Democracy in Motion (2013) என்ற நூலை எழுதிய கனேடிய ஆய்வாளர் ஆர்னால்டு ஆகஸ்ட் (Arnold August),

"கியூபாவில் மக்கள் சமூகத்தில் ஜனநாயகம் ஆழமாக வேரூன்றியுள்ளது. வட அமெரிக்காவில் இரண்டு கட்சிகள் இருந்தாலும் இரண்டுமே கார்ப்பரேட் கைக்கூலிகளாகச் செயற்படுவதால் இறையாண்மை மக்களிடமில்லை. கியூபாவில் ஒரு கட்சி ஆட்சியே என்றாலும் இறையாண்மை மக்களிடமே உள்ளது" என்று தெளிவாக நிறுவியுள்ளார்.

**நன்றி: காக்கைச் சிறகினிலே**

□ அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் சரி, உலகத்தில் வேறு எங்கும் சரி முதலாளித்துவம் பயன்தரவில்லை என்பதை உலகமே அறியும் ஒரு நெருக்கடியிலிருந்து அடுத்த நெருக்கடி என்று ஒவ்வொரு முறையும் அது மேலும் மேலும் மோசமான நெருக்கடிகளின் ஊடாகத்தான் தடுமாறிச் சென்றுகொண்டு இருக்கிறது.

□ அவர்கள் சோசலிசத்தின் தோல்வி பற்றி பேசுகின்றனர். முதலாளித்துவத்தின் வெற்றி எங்கே உள்ளது? ஆப்பிரிக்காவில், ஆசியாவில், லத்தீன் அமெரிக்காவில் முதலாளித்துவத்தின் வெற்றி எங்கே உள்ளது?

□ முதலாளித்துவம் குமட்டல் ஏற்படுத்துவதாக, நாற்றம் எடுப்பதாக, சீரற்றதாக, அந்நியப்படுத்துவதாக இருக்கின்றது. ஏனென்றால், அது போர்களை, பொய்மையான தோற்றங்களை, போட்டிகளை உருவாக்குவதாக இருக்கின்றது என்பதையே நான் காண்கின்றேன்.

□ ஒரு நாள் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் முதலாளித்துவம் இல்லாது ஒழியும். ஏனெனில், எந்தவித சமூக வர்க்கமும் நிலையானதல்ல. ஒரு நாள் வர்க்கப் பிரிவினை கொண்ட சமூகம் இல்லாமல் போகும்.

□ வட அமெரிக்கர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளவில்லை. எங்கள் தேசம் கியூபா மட்டுமல்ல. மானுட குலம் முழுமையுமே எங்கள் தேசம்தான். மனிதர்கள் வரலாற்றை உருவாக்குவதில்லை. வரலாறுதான் தனது தருணத்திற்கான மனிதர்களை உருவாக்குகின்றது.

□ நான் ஒரு மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட். எனது வாழ்வின் கடைசி நாள்வரை நான் ஒரு மார்சிஸ்ட் – லெனினிஸ்ட் ஆகத்தான் இருப்பேன்.

□ புரட்சி என்பது சுரண்டுபவர்களுக்கு எதிரான சுரண்டப்படுபவர்களின் சர்வாதிகாரம்.

- பிடல் காஸ்ட்ரோ